வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 29.05.2023 திங்கட்கிழமை | இதழ் : 171 | பக்கங்கள் : 16




# ஜெனிவா 53ஆவது கூட்டத் தொடர் இலங்கை மீது அழுத்தம் குறையும்?

ஜெனிவா, மே 29

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி ஆரம்பமாகிறது. எனினும், இந்த முறை அமர்வில் இலங்கைக்கு அழுத்தம் குறைவாகவே இருக்கும் என்று நம்பப்படுகிறது.

நிகழ்ச்சி நிரல்களின்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க், 19ஆம் திகதி பிற்பகலில் இலங்கை பற்றிய வாய்மொழி அறிக்கையை வழங்குவார். அன்றைய தினமே அவர், இலங்கை, ஈரான் இஸ்லாமிய குடியரசு, நிகரகுவா பற்றிய தனது எழுத்துபூர்வ அறிக்கையை சமர்ப்பிப்பார்.

முன்னதாக 2022 செப்ரெம்பர் 51/1 தீர்மானத்தின் கீழ், 2023 செபரெம்பர் 2023 இல் நடைபெறவுள்ள 54ஆவது அமர்வில் எழுத்துபூர்வ அறிக்கையை வழங்க இலங்கை கட்டாயப் படுத்தப்பட்டிருப்பதால், எதிர்வரும் ஜூன் மாத அறிக்கை கடுமையானதாக இருக்காது என்று ஜெனிவா தரப்பு தெரிவித்துள்ளது.

2022இல் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானத்துக்கு 20 நாடுகள் ஆதரவாகவும், 7 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன. 20 நாடுகள் வாக்களிக்கவில்லை.

இதன்படி, இலங்கையில் நல்லிணக்கத்தில் முன்னேற்றம் உட்பட மனித உரிமைகள் நிலைமையை கண்காணிப்பதற் 15



## பாக்குநீரிணையை நீந்தி மட்டு. மாணவன் சாதனை!

மன்னார், மே 29

மட்டக்களப்பு - புனித மிக்கேல் கல்லூரி மாணவனான தேவேந்திரன் மதுசிகன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் தனுஷ் கோடியிலிருந்து தலைமன்னாரை நோக்கி நீந்த ஆரம்பித்த மதுசிகன் 14 மணி நேரம் நீந்தி - பிற்பகல் 15

## டிப்பர் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்!

வடமராட்சி, மே 29

டிராக்டரை முந்திச் செல்ல முயன்ற டிப்பர் எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

ஏ -9 நெடுஞ்சாலையில் கிளிநொச்சி - உமையாள்புரம் பகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது. 15

## மதங்களை அவமதிப்போர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை

### பொலிஸ் மா அதிபருக்கு கடிதம்

கொழும்பு, மே 29

அரசமைப்பின் ஊடாக பௌத்த மதம் பாதுகாக்கப்பட வேண்டும் - போசிக்கப்பட வேண்டும் என உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அண்மைகாலமாக அமைப்புகள், தனி நபர்கள் என்ற அடிப்படையில் புத்தசாசனத்துக்கு எதிரான கருத்துகள் தீவிரமடைந்துள்ளன. இவ்வாறு மத அவமதிப்பில் ஈடுபடுவோருக்கு எதிராக ஐ. சி. சி. பி. ஆர். சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஸ்கிரிய மகா விகாரை தரப்பின் புத்தளம் மகா சபையின் பிரதான சங்க நாயக்கர் மீகட்டுவன்னே சுமித்த தேரர் பொலிஸ்மா அதிபரிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், 15

## எரிபொருள் கோட்டா அதிகரிக்கிறது

கொழும்பு, மே 29

புதன்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வாராந்த எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்படுகிறது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இதன்படி, மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டா 14 லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது. வாடகை முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருள் கோட்டா 22 லீற்றராக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோன்று, கார்களுக்கு 40 லீற்றரும் பேருந்துகளுக்கு 125 லீற்றராகவும் வாராந்த எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஐ. பி. எல். இறுதிப் போட்டி மழையால் தடைப்பட்டது!

### இன்றைய தினம் நடக்கும்

அஹமதாபாத், மே 29

ஐ. பி. எல். இறுதிப் போட்டி இன்று திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது. கடும் மழையால் நேற்றைய தினம் இந்த இறுதிப் போட்டி நடைபெறவில்லை.

16ஆவது ஐ. பி. எல். இருபது - 20 தொடரின் இறுதிப் போட்டிக்கு நடப்பு சம்பியனான குஜராத் ரைட்டன்ஸ் அணியும் 4 தடவைகள் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் தகுதி பெற்றிருந்தன.

இந்த, இறுதிப் போட்டி நேற்று ஞாயிற்றுக் கிழமை அஹமதாபாத் நரேந்திர மோடி மைதா 15

இன்றைய தினம்
க.பொ.த.
சாதாரணதர
பரீட்சைக்கு
தோற்றும்
மாணவர்களுக்கு
எமது
நல்வாழ்த்துக்கள்

## சாதாரண தர பரீட்சை இன்று ஆரம்பம்

கொழும்பு, மே 29

2022ஆம் ஆண்டுக்கான க. பொ. த. சாதாரணதரப் பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது. எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு 4 இலட்சத்து 72 ஆயிரத்து 553 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள 3 ஆயிரத்து 568 15

## வட, கிழக்கு உட்பட நாட்டில் வெப்பநிலை அதிகரிக்கும்!

கொழும்பு, மே 29

தென்மேற்கு பருவ மழை தொடங்கும் வரை நாட்டின் வெப்பநிலை அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வாளர் மலிந்த மில்லங்கொட தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு, வடமேற்கு, வடகிழக்கு, மேல் மாகாணங்கள் இந்த வெப்பநிலை உயர்வால் பாதிக்கப்படும். கட்டடங்களும், மக்களும் நிறைந்துள்ள கொழும்பு, கம்பஹா நகரங்கள் வெப்ப அலை 15

## நாணய நிதியத்தைவிட இலங்கைக்கு அதிக உதவியை இந்தியா வழங்கியது

### இந்திய வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, மே 29


சர்வதேச நாணய நிதியத்தை (ஐ. எம். எவ்.) விட இந்தியா இலங்கைக்கு அதிகளவு உதவிகளை வழங்கியுள்ளது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்திய பெருங்கடலில் உள்ள தீவுகள், வளைகுடா நாடுகள், தென்கிழக்காசியாவில் உள்ள நாடுகளை உள்ளடக்கிய விஸ்தரிக்கப்பட்ட அயலை உருவாக்குவது குறித்து பிரதமர் மோடி அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

பல்கலைகழகம் ஒன்றில் மோடியின் இந்தியா எழுச்சிபெறும் சக்தி என்ற கருப்பொருளில் உரையாற்றுகையி லேயே ஜெய்சங்கர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்புகளும் அண்டை நாடுகளில் இந்தியா பற்றிய 15





## வட மாகாண மக்கள் நலனுக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளது

### இந்திய தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

வடக்கு மாகாண மக்களின் நலனுக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது என்று வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸிடம் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஒருவன் பொருள்களை வாங்குவதற்காக பல கடைகளுக்குச் சென்றான். பல கடைகளுக்கு சென்றுவந்த பின்னர்தான் கையில் இருந்த குடையை எங்கேயோ வைத்துவிட்டு வந்துவிட்டோம் என்பது நினைவுக்கு வந்தது. ஆனால், எங்கே குடையை வைத்து விட்டோம் என்பது அவனுக்கு நினைவில் இல்லை. ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கினான்.

கடைசியாக ஒரு கடைக்காரர் அவனின் குடையை அவனிடம் கொடுத்தார். யாரோ வாடிக்கையாளர் வைத்துவிட்டுப் போய் விட்டார் என்று எடுத்து கவனமாக வைத்திருந்தார் அவர்.

குடையை வாங்கிக் கொண்டு அவன் சொன்னான்:

'இந்த ஊரிலேயே நீங்க ஒருத்தர்தான் நேர்மையானவர். என் குடையை திருப்பிக் கொடுத்திட்டீங்க. மற்றவர்கள் எல்லாம் அயோக்கியர்கள். நான் குடையைக் கடையில் விட்டிட்டுப் போகவே இல்லை என்று சொன்னார்கள்', என்றான்.

இதற்கும் இனிச் சொல்லப் போகின்ற சங்கதிக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. இன்றைய பத்தியை நான் அண்மையில் வாசித்த ஒரு நகைச்சுவையோடு தொடங்குவோம் என்று தந்தேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை விஸ்தரிப்பு தொடர்பான செய்திகள் பல மாதங்களாக தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. தற்போது இருக்கின்ற அமைச்சர்களுடன் இன்னமும் பன்னிரண்டு புதிய அமைச்சர்களை நியமிக்க அவர் விரும்பியபோதிலும் அந்த பன்னிரண்டு பேரில் தமது கட்சியைச் சேர்ந்த நால்வராவது குறைந்தது இருக்க வேண்டும் என்று பொதுஜன பெரமுன கண்டிப்பாக - கறாராக கேட்டுவிட்டது மாத்திரமல்ல, அந்த நால்வரும் யார் என்ற பட்டியலையும் ரணிலிடம் கொடுத்து விட்டது.

அந்த நால்வருக்கும் அமைச்சரவையில் இடம் இல்லை என்பதை ரணில் அழுத்தம்திருத்தமாக சொல்லிவிட்டபோதிலும் அவர்களுக்குத்தான் தமது தரப்பிலிருந்து நியமனம் வழங்க வேண்டும் என்பதில் பெரமுன பிடிவாதமாக இருக்கின்றது.

பலவேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே, சந்திரசேன ஆகிய அந்த நால்வருக்கும் அமைச்சரவையில் இடம்கொடுப்பதில்லை என்பதில் ஜனாதிபதி ரணில் உறுதியாக இருக்க, அதனாலேயே ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து கட்சி தாவத் தயாரானவர்கள் மாத்திரமல்ல, ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஒரேயோர் எம்.பியான வஜிர அபேவர்த்தனவுக்கும் பதவியை கொடுக்க முடியாமல் கடந்த எட்டு மாதங்களாக காலம் கடத்திக்கொண்டிருக்கிறார் ஜனாதிபதி.

இப்படியே காலம் போய்க் கொண்டிருக்க, அவரோ ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகி வருகிறார்.

தன்னோடு இணைய விரும்பிய ஐக்கிய மக்கள் சக்தியினர் அனைவருக்கும் அமைச்சரவையில் இடம் கொடுக்க முடியாததால், அவர்களை எதிரணியிலிருந்து வெளியேறி வெளிச் செயல் படுவதுபோல அரசுக்கு ஆதரவாக செயல்படுங்கள் என்று ரணில் விடுத்த கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ள சற்று தயக்கத்துடன் இருப்பது பற்றி முன்னரும் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

இப்போது, ரணிலுக்கு சாதகமான நிலை இருப்பதுபோல தேர்தல் அறிவிக்கப்படும் போதும் இருந்தால் மாத்திரமே அவரோடு இணையலாம் என்ற எதிர்பார்ப்பில் அந்த எதிரணி எம்.பிக்கள் காத்திருப்பது பற்றி அப்போது குறிப்பிட்டிருந்தேன்.

அதனால், பொதுஜன பெரமுனவில் உள்ள கோட்டாபய ஆதரவு எம்.பிக்களையும் தனது பக்கம் அரவணைக்க ரணில் காய் நகர்த்தி வருகிறாராம். ஒப்பீட்டடிப்படையில் கோட்டாபய ஆதரவு எம்.பிக்களான பேராசிரியர் நாலக கொடஹேவா, பேராசிரியர் சன்ன ஜயசுமண, செஹான் சமரசிங்க, காஞ்சன விஜயசேகர போன்ற பன்னிரண்டு பேர் ரணிலுடன் இணைவதற்காக கோட்டாபய ஊடாக பேச்சை ஆரம்பித்துள்ளனர்.

அதாவது, பொதுஜன பெரமுன கட்சியினர் ரணிலுடன் இணைவதானாலும் அவர்களை வடிகட்டி எடுப்பதற்கே ரணில் விரும்புகின்றார் என்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கு இதுவரை ஆளாகாதவர்களை தேடித்தேடி அவர் பேசிக்கொண்டிருக்கிறார் எனவும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நேரத்திலேயே, தமக்கு பதவிகள் கிடைக்கவில்லை என்பதால் அதிருப்தி அடைந்திருக்கும் சில பொதுஜன பெரமுன எம். பிக்கள் அரசிலிருந்து வெளியேறி எதிரணியில் உட்காரத் தயாராகி வருகின்றனர் என்றும் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியில் சங்கமமாக தயாராகி வருகின்றனர் எனவும் கூறப்படுவது ரணிலை மேலும் உற்சாகப்படுத்தியிருக்கிறதாம்.

சஜித் அணியிலிருந்து பலர் ரணிலில் தரப்புக்குத் தாவிய பின்னர், பெரமுனவின் ஊழல்வாதிகள் அங்கே சென்று சேர்ந்துவிட்டால் தன்னைத் தூய்மையான ஆளாகக் காட்டிக் கொள்ள அது உதவும் என்று கணக்குப் போட்டிருக்கிறாராம் ஜனாதிபதி.

ஜப்பான் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி ரணில், மேலும் சில நியமனங்களைச் செய்யவிருக்கிறாராம். இதிலும், பெரமுனகாரர்களுக்கு இடம் இல்லை என்றால் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான தேவையற்ற சிறப்புரிமைகளை நீக்குக!

### விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

கொழும்பு, மே 29

பாராளுமன்ற உறுப்பினர்கள் விமான நிலையத்தின் பிரமுகர்களின் முனையங்கள் ஊடாக சோதனையின்றி வருவதற்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் நீக்கப்பட வேண்டுமென விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிறப்புரிமைகளை பயன்படுத்தி அலி சப்ரி ரஹீம் அவ்வாறு செயல்பட்டமைக்கு கண்டனம் தெரிவிப்பதாகக் கூறிய அமைச்சர், அவரை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கும் யோசனையைக் கொண்டு வந்தால் அதற்கு ஆதரவளிப்பேன் என்றும் கூறினார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவையற்ற சிறப்புரிமைகள் அகற்றப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஐ)

## மத முரண்பாட்டை ஏற்படுத்துவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை

கொழும்பு, மே 29

நாட்டில் மதங்களுக்கு இடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனவாதம் மற்றும் மதவெறியை பரப்புவதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டார். கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் வஜிர அபேவர்த்தன இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை கைப்பற்றியதன் முதன்மையான நோக்கம் வீழ்ந்த நாட்டைக் கட்டியெழுப்புவதே. கடந்த காலங்களில் சிலர் எடுத்த தனிப்பட்ட தீர்மானங்களுக்கு முன்னுரிமை வழங்கியதன் காரணமாக இலங்கைமீது ஜப்பானுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

எனவே, அதனை போக்குவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பான் பயணம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், நீண்ட காலமாக தேசிய திட்டத்தைச் செயல்படுத்த எந்த நாட்டுத் தலைவருக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை - என் றும் அவர் கூறினார். (ஐ)

## கத்தி வெட்டுக்குள்ளான பெண் பொலிஸ் படுகாயம்!

கொழும்பு, மே 29

பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கத்தி வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கம்பஹா - வெயங்கொட, கும்பலொலுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

பொலிஸ் இசைக்குழுவில் பணிபுரியும் மீரிகமை இருபது ஏக்கர் பிரதேசத்தைச் சேர்ந்த பெண் கான்ஸ்டபிளே இவ்வாறு காயமடைந்தவராவார். அவர், தலை மற்றும் கைகளில் பலத்த காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மின்சாரம் தாக்கி முதியவர் மரணம்

கொழும்பு, மே 29

ஹிற்றருக்குள் தண்ணீரை ஊற்றி ஆளியை அழுத்த முயன்ற முதியவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் மொனராகலை - வெல்லவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொன்கஹ ருப்ப பிரதேசத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. இதில், 66 வயதான நபரே உயிரிழந்தார்.

தனியாக வசித்து வந்த நிலையிலேயே அவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.(ஐ)

## ஆஸியிலிருந்து விமானத்தில் வந்த யாழ்ப்பாணத்தவர் மரணம்!

கொழும்பு, மே 29

அவுஸ்ரேலியா - மெல்பர்னில் இருந்து கட்டுநாயக்கா நோக்கி பயணித்த விமானத்தில் பயணித்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பர்னிலிருந்து நேற்று முன்தினம் இரவு 10.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த சிறீ லங்கன் எயார்லைன்ஸ் UL-605 என்ற விமானத்திலேயே அவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த 75 வயதுடைய ரத்னலிங்கம் ராமலிங்கம் என்பவரே உயிரிழந்தார்.

அவுஸ்திரேலியாவில் இருந்து விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் மாரடைப்பு ஏற்பட்டு அவர் மரணத்திலேயே உயிரிழந்தார் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## வீதி அபிவிருத்த திட்டம் மீண்டும் ஆரம்பமாகும்!

கொழும்பு, மே 29

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் தற்போது நிறுத்தப்பட்டுள்ள வீதி அபிவிருத்தி திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று முந்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவ்வாறு தெரிவித்தார். (ஐ)

## சாதாரண தரப் பரீட்சைக்கு 10 கைதிகள் தோற்றுகின்றனர்!

கொழும்பு, மே 29

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 10 கைதிகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் தோற்றவிருக்கின்றனர் என்று சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது.

வட்டரெக்க சிறைச்சாலை கைதிகள் ஐவரும், வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் ஐவருமே பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்று சிறைச்சாலைகள் மேலதிக ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அந்த கைதிகள் வட்டரெக்க மற்றும் மகசின் சிறைச்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளனர். இந்த 10 கைதிகளில், வாழ்நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவரும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
29.05.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 14

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அநுரவின் அறகலய?

அடுத்த மாதம் 8ஆம் திகதி பிறிதோர் அறகலயவை ஆரம்பிக்கப் போவதாக தேசிய மக்கள் சக்தியின் (ஜே. வி. பி) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார். அரசாங்கம் தொடர்ந்தும் உள்ளூராட்சி தேர்தலை பிற்போட்டுவரும் நிலையில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட்ட அனைவரும் ஜூன் 8ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவுக்கு முன்பாகக் கூடுமாறு அநுரகுமார திஸாநாயக்க அறிவித்திருக்கின்றார்.

சுயாதீன கருத்துக் கணிப்புகளின்படி, அநுரகுமாரவின் செல்வாக்கு இப்போதும் பிரகாசமாகவே இருப்பதாக நோக்கப்படுகின்றது. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவால் விடும் ஒரு பிரதான வேட்பாளராக அநுரகுமார வெளித் தெரியலாம் என்னும் கணிப்புகள் காணப்படுகின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து அனைத்து நகர்வுகளையும் முன்னெடுத்து வருகின்றார். இந்த நிலையில், ரணில் தனக்கு சவாலான சூழல் ஒன்றை இல்லாமல் செய்வதற்காக எவ்வாறான விலையையும் கொடுப்பது பற்றி சிந்திக்க பின்நிற்கமாட்டார். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு அடித்தள சிங்கள மக்கள் மத்தியில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய செல்வாக்கு இல்லையென்பதும் அனைவரும் அறிந்த விடயம்தான். இந்த நிலையில் சஜித் பிரேமதாஸவும் அநுரகுமார திஸாநாயக்கவும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார்களானால் ரணிலால் அடித்தள சிங்கள மக்களை நெருங்க முடியாது.

ஏனெனில், ரணிலால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களின் பலாபலன்களை சாதாரண மக்கள் முழுமையாக அனுபவிக்கவில்லை. குறிப்பாக, அடித்தள சிங்கள மக்களின் வாழ்வில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய மாற்றங்கள் ஏற்படவில்லை. இந்த நிலையில், ரணிலின் ஆற்றல் தொடர்பில் சாதாரண மக்கள் சிந்திக்கப் போவதில்லை. பொதுவாக சாதாரண மக்கள் அரசியல்வாதிகளின் ஆளுமையை கருத்தில்கொண்டு வாக்களிப்பதில்லை. ஆளுமை மத்தியதர வர்க்கத்துக்கு உரிய ஒன்று மட்டுமே. சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் காலாதிகாலமாக சிங்கள மக்களை பிணைத்திருக்கும் சில சுலோகங்களை எவர் கச்சிதமாக உயர்த்திப் பிடிக்கின்றாரோ அவரையே தங்களின் தலைவராக சாதாரண மக்கள் கருதுவதுண்டு.

இவ்வாறானதொரு பின்புலத்தில் அநுரகுமார மீண்டுமோர் அறகலயவை ஆரம்பிக்கப் போவதாகக் கூறியிருப்பது கொழும்பு அரசியலில் மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தலாம். இவ்வாறான அறகலயவின் நோக்கம் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான சூழலை ஏற்படுத்துவதுதான். ஆனால், அவ்வாறானதோர் அறகலய ஏற்படுமாக இருந்தால் அதனை ரணில் எவ்வாறு எதிர்கொள்வார்? ஓர் அரசியல் கட்சி அறகலயவை ஆரம்பிக்கும்போது, அது முன்னர் இடம்பெற்ற அறகலய போன்று வீரியமான ஒன்றாக இருக்க வாய்ப்பில்லை. ஒரு வேளை வீரியமான ஒன்றாக மாறினால் அது நிலைமைகளை தலைகீழாக்கலாம்.

## இனப்படுகொலை செய்தவர்களுக்கான தூபியில் தமிழரையும் நினைவேந்த முடியாது!

### ஜனநாயகப் போராளிகள் கட்சி

யாழ்ப்பாணம், மே 29

இனப்படுகொலை செய்த படையினரை நினைவுகூரும் நினைவு தூபியில் தமிழர்களையும் நினைவு கூருவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதனை வன்மையாக கண்டிக்கிறோம் என்று ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க. துளசி தெரிவித்துள்ளார்.

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனைத்து இனத்தவர்களையும் நினைவுகூருவதற்கான பொது நினைவுத்தூபி அமைக்கும் செயல்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுநினைவுத்தூபி என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை வெகுவாகப் பாதிக்கும் செயல்பாடு.

அத்துடன், இனவாதியான சரத்வீரசேகர அண்மைக்காலமாக தமிழ் மக்களை மிரட்டும் தொனியில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றார். அவ்வாறு வெளியிடும் கருத்துக்களை இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருகின்றன என்றும் அவர் கூறினார். (ஐ)

## வெளிவாரி ஊடக கற்கைகள் வவுனியா பல்கலையில் ஆரம்பம்!

வவுனியா, மே 29

வவுனியா பல்கலைக்கழகத்தில் வெளிவாரி ஊடக கற்கைகள் பிரிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனியா பூங்கா வீதியில் உள்ள பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பிரிவில் கல்வியியலாளர் திருமதி மதிவதனி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் த. மங்களேஸ்வரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக ஊடகவியலாளர் ந. கபிலநாத் பங்கேற்றார்.

இதேவேளை வெளிவாரி கற்கைகள் பீட பணிப்பாளர் மற்றும் தொழில் மேம்பட்டு பிரிவு அதிகாரியும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

ஆர்வமுள்ள வெளிவாரி ஊடக கற்கைநெறிக்காக புதிய மாணவர்களை எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர் வவுனியா பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தையும் பல்கலைக்கழக நிர்வாகம் வழங்கியுள்ளது. (ஐ)

## சபுகஸ்கந்தையில் லிட்ரோ முனையம் அமைக்கிறது!

கொழும்பு, மே 29

சபுகஸ்கந்தையில் புதிய எரிவாயு முனையத்தை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர் கோரிக்கையை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

புதிய முனையத்தில் இருந்து தினமும் 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் எரிவாயு கொள்கலன்கள் சந்தைக்கு வெளியிடப்படும்- என்றும் அவர் கூறினார். (ஐ)

## கிளிநொச்சியில் மாடுகளுக்கு மீண்டும் பெரியம்மை நோய்!

கிளிநொச்சி, மே 29

நாட்டில் பல மாவட்டங்களில் கால்நடைகளுக்கு பெரியம்மை நோய் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் அந்த நோயின் தாக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது.

கண்டாவளை கால்நடை மருத்துவ அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவில் சில கால்நடை வளர்ப்பாளர்களின் கால்நடைகளுக்கு பெரியம்மை நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது.


இந்த நிலையில், ஒரு மாடு ஒன்று பெரியம்மை நோய் தாக்கத்தால் இரு வாரங்களுக்கு முன்னர் இறந்ததாகக் கூறப்படுகின்றது.

நோய் காரணமாக உணவு இன்றி நீரும் அருந்த முடியாத நிலையிலேயே அது உயிரிழந்ததாக மாட்டின் உரிமையாளர் தெரிவித்திருந்தார். (ஐ)



அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய (நாவலடி அம்மன்) வருடாந்த பெருந்திருவிழாவில் நேற்று மூன்றாம் நாள் திருவிழா நடைபெற்றபோது...! (படம் – ஐ.சிவசாந்தன்)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மே - 29 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 15
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : தசமி




**மேடம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
நட்பு வட்டம் விரியும். அரசுஅதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**
தன்னிச்சையாக சில் முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரம் நல்ல நிலைமையில் சூடு பிடிக்கும். உயரதிகாரிகள் பாராட்டும்படி நீங்கள் நடந்துக் கொள்வீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கடகம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்த லாபம் வரும். உயர் அதிகாரிகள் உங்களை நன்றாக நடத்துவார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் வேண்டாம். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். எச்சரிக்கையுடன் செயல்படும் நாள்.

**கன்னி**
ஒரு விஷயம் நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். போராடி வெல்லும் நாள்.

**துலாம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்த்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சிறப்பான நாள்.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் வரும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புதிய மாற்றங்கள் ஏற்படும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். அதிகாரிகள் உறுதுணையாக இருப்பார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மீனம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொண்டு தொழிலை மேம்படுத்தமிகவும் பாடுபடுவீர்கள்.அதிகாரிகள் சில சூட்சமங்களை சொல்லித் தருவார். தொட்டது துலங்கும்.

# உதயநிதி அறக்கட்டளையின் வங்கி கணக்கு முடக்கப்பட்டது

## வருமான வரித்துறை நடவடிக்கை

சென்னை, மே 29

சட்டவிரோத பரிவர்த்தனை தொடர்பாக உதயநிதி ஸ்டாலின் பௌண்டேஷனின் வங்கி கணக்கு முடக்கபப்பட்டது.

கனிம வள வர்த்தக வியாபாரத்துக்காக போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த பெட்டிக்கோ கமர்ஷியோ நிறுவனம், சென்னையில் செயல்பட்டு வந்த கல்லால் குழுமத்தில் கடந்த ஆண்டு 114 கோடி (இந்திய) ரூபாய் முதலீடு செய்தது.

ஆனால், போலி ஆவணங்களை தயாரித்து மோசடியில் ஈடுபட்டதாக, கடந்த ஆண்டு செப்ரெம்பரில் சென்னை மத்திய குற்றப் பிரிவில், கல்லால் குழுமம் மற்றும் அதன் இயக்குநர்கள் மீது போர்த்துக்கல் நிறுவனம் முறைப்பாடளித்தது.

இதன் அடிப்படையில், மத்திய குற்றப் பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தினர். 200 கோடி ரூபாய் மோசடி நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்தத் தொடர்பின் அடிப்படையிலேயே பிரபல திரைப்பட தயாரிப்பு நிறுவனமான லைகா குழுமத்திடம் சோதனைகள் நடத்தப்பட்டன.

இங்கு பெறப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில், உதயநிதி ஸ்டாலின் பௌண்டேஷனுக்கு பண பரிமாற்றம் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் சிக்கின. இதையடுத்து, உதயநிதியின் அலுவலகத்தில் சோதனை நடத்தப்பட்டது. இதில், லைகா நிறுவனம் ஒரு கோடி ரூபாயை உதயநிதி அறக்கட்டளைக்கு வழங்கியமைக்கான ஆவணம் சிக்கியது. அத்துடன், ஆவணங்களின்றி 36.3 கோடி ரூபாய் பெறுமதியான அசையும் அசையா சொத்துகள், 34.7 கோடி ரூபாய் வங்கி இருப்பு கொண்ட சொத்து என்பவற்றை வருமான வரித்துறையினர் முடக்கியுள்ளனர். (ஐ)

# சிதம்பரம் கோயில் விவகாரம் விசாரணை குழுவை அமைக்குக!

சிதம்பரம், மே 29

சிதம்பரம் கோயில் தீட்சிதர் விவகாரத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்க வேண்டுமென பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர்,

“சிதம்பரம் கோயில் தீட்சிதர் மற்றும் சிறுமியின் பால்ய விவாக திருமணம் குறித்து சமூக வலைதளங்களில் செய்திகள் பரவி வருகின்றன. நம் நாட்டைப் பொறுத்தவரை அனைவரும் சட்டத்துக்கு உட்பட்டே செயல்பட்டு வருகிறோம்.

ஏதோ ஒரு காழ்ப்புணர்ச்சியோடு சிதம்பரம் கோயிலையும் அங்குள்ள தீட்சிதர்கள் குறித்தும் தி. மு.க. அரசு தவறான முறையில் அணுகிக் கொண்டிருக்கிறது. சிதம்பரம் கோயிலைப் பொறுத்தவரை, 1952ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவுப்படி அரசின் கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. ஆனால், தி. மு. க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து தினமும் பிரச்னை எழுகிறது.

இந்தப் பிரச்னைக்கு தீர்வுகாண, ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் தமிழக அரசு விசாரணைக் குழு அமைத்து, உண்மைத்தன்மையை கண்டறிய வேண்டும்” என்றார். (ஐ)

# தமிழ்நாட்டை ஆள்வது தி. மு. கவா, பா. ஜ. கவா?

## சந்தேகம் எழுப்புகிறார் சீமான்

சென்னை, மே 29

“தமிழ்நாட்டை ஆள்வது தி. மு. கவா? அல்லது பா. ஜ. கவா? என்று சந்தேகப்படும் அளவுக்கு தி. மு. க. ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் இந்துத்துவ அமைப்புகளின் மதவெறிச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது” என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“நாகப்பட்டினம் மாவட்டம் திருப்பூண்டி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வரும் ஜன்னத்தை கடந்த 24ஆம் நாள் இரவுநேர பணியின்போது அப்பகுதியை சேர்ந்த பாஜக நிர்வாகி புவனேஷ் ராம் மருத்துவமனையில் ஹிஜாப் அணியக் கூடாது என்று மிரட்டியுள்ளதோடு, ஹிஜாப்பை கழற்ற வேண்டுமென கூறி பணி செய்யவிடாமல் வாக்கு வாதத்தில் ஈடுபட்டுள்ளது பெரும் அதிர்ச்சியளிக்கிறது.

நாகை மாவட்டம் தமிழ் நாட்டில் இருக்கிறதா? அல்லது உத்தரபிரதேசத்தில் இருக்கிறதா? தமிழ்நாட்டை ஆள்வது தி. மு. கவா? அல்லது பா. ஜ. கவா? என்று சந்தேகப்படும் அளவுக்கு தி. மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் இந்துத்துவ அமைப்புகளின் மதவெறிச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மதவெறியர்களின் மனித வெறுப்புச் செயல்களை தடுத்து நிறுத்தாமல், அதற்கு துணைபோகும் திமுக அரசின் ஆர்எஸ்எஸ் ஆதரவுப் போக்கு வன்மையான கண்டனத்துக்கு உரியது - என்றுள்ளது.

# தமிழ்நாட்டில் ஊழல் உச்சம்; நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## பழனிசாமி வலியுறுத்து

சென்னை, மே 29

“டில்லி அரசில் நடைபெற்ற மதுபான கொள்கை ஊழலைவிட பல நூறு மடங்கு ஊழல் தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியில் நடந்துள்ளது. சோதனையோடு நின்றுவிடாமல் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் தவறு இழைத்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

“கடந்த இரண்டு ஆண்டுகால தி. மு. க. ஆட்சியில் முதல்வரின் மகனும் மருமகனும் 30,000 கோடி ரூபாயை என்ன செய்வது என்று தெரியாமல் தவிப்பதாக அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் உரையாடிய ஒலிப் பதிவு கசிந்ததாக அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்டுள்ளன. அமைச்சர் செந்தில்பாலாஜி வகித்து வரும் துறையில் ஒன்றான மதுபான விற்பனை துறையில் சுமார் 4000இற்கும் மேற்பட்ட மதுபான விடுதிகளின் உரிமம் புதுப்பிக்கப்படாமல் அவரின் நிறுவனத்தால் நடத்தப்பட்டன.

இதனால், தமிழக அரசுக்கு கோடிக்கணக்கான வரி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுதவிர கூடுதல் கட்டணங்களால், பல ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் நடைபெறுகிறது என்று நாளிதழ்களும், ஊடகங்களும் செய்திகள் வெளியிட்டுள்ளன.

டில்லி அரசில் நடைபெற்ற மதுபானக் கொள்கை ஊழலை விட பலநூறு மடங்கு ஊழல் தமிழகத்தில் இந்த தி. மு. க. ஆட்சியில் நடந்துள்ளது. சோதனையோடு நின்றுவிடாமல் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் தவறு இழைத்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது. (ஐ)

# தொல்பொருள் சட்டவிரோத கட்டடம்; அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை



**அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கூறுகிறார்**

கொழும்பு, மே 29

**வடக்கு, கிழக்கில் உள்ள தொல்பொருள் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பில் முழுமையான அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.**

வடக்கு, கிழக்கில் தொல்பொருளியல் திணைக்களத்தால் அடையாளம் காணப்படும் பகுதிகளில் பௌத்த அடையாளங்கள் நிறுவப்படுதல் மற்றும் தனியார் காணிகளில் பௌத்த விகாரைகள் நிறுவப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கில் போர் நிலைமைகள் நீடித்தமையால் தொல்பொருள் பகுதிகள் முழுமையாக அடையாளம் காணப்படவில்லை. தொல்பொருள் என்பது நாட்டின் மரபுரிமைகள் சார்ந்த விடயமாகும். அதற்கும் இன அடையாளங்களுக்கும் தொடர்பில்லை.

இந்நிலையில், நாம் வடக்கு, கிழக்கில் காணப்படுகின்ற தொல்பொருளியல் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட அனைத்து அடையாளங்களும் சட்டத்துக்கு முரணானவையாகும்.

ஆகவே, அவை தொடர்பில் முழுமையான அறிக்கை கோரியுள்ளேன் அந்த அறிக்கை கிடைத்ததும் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும். குருந்தூர்மலை, வெடுக்குநாறி தொடர்பில் நீதிமன்றங்களில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. அந்த வழக்குகளின் தீர்ப்புகள் வந்தபின்னரே இறுதியான தீர்மானத்தை எடுக்க முடியும்.

கிளிநொச்சி உருத்திரபுரம் கந்தசுவாமி கோவில், திருக்கேணேஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் தொல்பொருளியல் அடையாளங்கள் காணப்படுகின்றன என்று எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சில இடங்களில் தொல்பொருளியல் பகுதிகளில் கோவில்கள் உள்ளிட்ட நிர்மாணங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை தொடர்பிலும் கரிசனை கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன், வடக்கு, கிழக்கில் பௌத்தர்கள் வாழ்ந்துள்ளார்கள். அவர்களின் அடையாளங்களும் காணப்படுகின்றன. ஆகவே, அந்த வரலாற்று தகவல்களையும் பாதுகாக்க வேண்டியது கடமையாகின்றது. அதுபற்றி யாரும் அச்சமடைய வேண்டியதில்லை- என்றார்.

(ஐ)

## மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் சுமந்திரனின் பிரேரணை வரவேற்புக்குரியது

**முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா**

கொழும்பு, மே 29

புதிய மாகாண சபை சட்ட மூலத்துக்கு நான் எதிர்ப்பு தெரிவித்தபோது ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் என்னை கடுமையாக விமர்சித்தார். மாகாண சபை தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள பின்னணியில் பழைய மாகாண சபைத் தேர்தலை நடத்த சுமந்திரன் தனிநபர் பிரேரணை கொண்டுவந்துள்ளமை வரவேற்கத்தக்கது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய நூலகசாலையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், மாகாண சபைகள் தேர்தலுக்கு நேர்ந்த கதியே உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கும் நேரிடும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த நிதி இல்லை என்று குறிப்பிடும் அரசாங்கம் அமைச்சரவையை விரிவுபடுத்த விசேட கவனம் செலுத்தியுள்ளது.



அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு முழு உலகத்தையும் வலம் வருகிறார். மாகாண சபைத் தேர்தல் குறித்து தற்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் இரு அரச தலைவர்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் 2017ஆம் ஆண்டு திருத்தம் கொண்டுவரப்பட்டது. பழைய தேர்தல் முறையில் திருத்தம் செய்யும் வகையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் எதிர்காலத்தில் பெரும் விளைவுகளை ஏற்படுத்தின.

மாகாண சபைத் தேர்தல் புதிய சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தபோது தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் என்னை கடுமையாக விமர்சித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் ஏற்படுத்தும் மாற்றம் மாகாண சபைத் தேர்தலுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதை 2017ஆம் ஆண்டு குறிப்பிட்டேன். எனது கருத்து தற்போது உண்மையாகியுள்ளது. காலம் கடந்த நிலையில் பழைய தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் தனிநபர் பிரேரணையை கூட்டமைப்பின் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் முன்வைத்துள்ளமை வரவேற்கத்தக்கது - என்றார்.

(ஐ)

## விவசாயிகளின் பிரச்னைகளை கேட்டறிந்தார் சித்தார்த்தன் எம். பி.



யாழ்ப்பாணம், மே 29

இளவாலை வடக்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவாசயிகள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சிர்த்தார்த்தன் நேற்று முன்தினம் அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தனியார் நிறுவனம் ஒன்று அப்பகுதியில் கிணற்று நீரை ஐஸ் உற்பத்திக்காக எடுத்து செல்கிறது என்றும் இதனால், தமது விவசாய கிணறுகளின் நீர் மட்டம் குறைவதாகவும் எதிர்காலத்தில் உவர் நீராக மாறும் சாத்தியம் காணப்படுகிறது என்றும விவசாயிகள் அவரிடம் தெரிவித்தனர். இந்த நடவடிக்கையால் கொடி முந்திரிகை செய்கையில் ஈடுபடும் அதிகளவான விவசாயிகள் பாதிப்படைந்து வருகின்றனர் என்றும் அவர்கள் கூறினர்.

இதன்போது, கிணற்று நீரை உறிஞ்சும் நிறுவனத்தின் பணிகளையும் பார்வையிட்ட சித்தார்த்தன் எம். பி அந்த நிறுவனத்துடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

தொடர்ந்து, விவசாயிகளின் பிரச்னைகள் குறித்து உரிய தரப்பினருடன் பேசி முடிவு எடுப்பதாகவும் உறுதியளித்தார் சித்தார்த்தன் எம். பி. இந்த சந்திப்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ப. கஜதீபனும் பங்கேற்றிருந்தார்.

(ஐ)

## வீடொன்றின் வளவிலிருந்து இளைஞர் சடலமாக மீட்பு!

வடமராட்சி, மே 29

பருத்தித்துறையில் இளைஞர் ஒருவரின் சடலம் வீடொன்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. பிறிதொரு வீட்டில் இருந்தே இளைஞனின் சடலம் மீட்கப்பட்டது.

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத்தெருவை சேர்ந்த தியாகராசா சந்திரதாஸ் என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் வீட்டுக்கு அண்மையாக உள்ள 3ஆம் குறுக்குத்தெருவில் உள்ள பிறிதொரு வீட்டிலிருந்தே சடலம் மீட்கப்பட்டது. அந்த வீட்டுக்குள் உயிரிழந்தவர் அத்துமீறி நுழைந்திருக்கலாமெனக் கூறப்படுகின்றது.

நேற்று காலையில் சடலத்தை கண்டதாக அந்த வீட்டுக்காரர்கள் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

பொலிசார் சடலத்தை மீட்டு, உடல்கூறாய்வுக்காக அனுப்பியுள்ளனர். அந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஐ-02)

## கிளிநொச்சி வெடிகுண்டு மிரட்டல்; ரி. ஐ. டியினர் தீவிர விசாரணையில்!

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சியில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாக குறிப்பிடப்படும் கடிதம் மீட்கப்பட்ட விவகாரத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தீவிர விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகருக்கு அண்மையான பகுதியில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் தனது வீட்டுக்கு இரண்டு பெண்கள் வந்தனர் என்றும், அவர்கள் இருவரும் இடம் ஒன்றை குறிப்பிட்டு, அங்கு வந்தனர் எனக் கூறியுள்ளனர். இரவு வெகு நேரமாகி விட்டதால் வீட்டுக்கு செல்ல பேருந்து வசதி இல்லை எனவே, வீட்டில் இரவு தங்கி செல்லலாமா எனக் கேட்டனர். அதற்கு தான் அனுமதி அளித்தார் என்றும் வீட்டின் உரிமையாளரான பெண் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

மேலும், இரண்டு பெண்களையும் வீட்டின் முன்பகுதியில் தங்க வைத்துவிட்டு, அறைக்குள் பிள்ளையுடன் உறங்கச் சென்றார் என்றும், நள்ளிரவு 12 மணியளவில் வெளியில் வந்து பார்த்த போது, இரண்டு பெண்களையும் காணவில்லையென்றும், அவர்கள் படுத்திருந்த இடத்தில் கடிதம் ஒன்றும் ரூ.5,000 நாணயத்தாளும் காணப்பட்டன என்று தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில், வெடிகுண்டு மிரட்டில் விடுக்கப்பட்டிருந்ததுடன், மதம்தான் எங்கள் மூச்சு உள்ளிட்ட சில வாசகங்களும் காணப்பட்டன. அதில் இரண்டு தொலைபேசி இலக்கங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. அந்த வீட்டின் உரிமையாளரான பெண் இஸ்லாமிய மதத்தவர். இரண்டு வருடங்களின் முன்னர், கிளிநொச்சியை சேர்ந்த ஒருவரை திருமணம் செய்து, அந்த வீட்டுக்கு குடிவந்தவர். எனினும், கணவர் தற்போது பிரிந்து சென்றுவிட்டார். என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# பொது நினைவுத் தூபியை ஏற்றுக்கொள்ளவே முடியாது!








## தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தெரிவிப்பு

கொழும்பு, மே 29

**அரசாங்கம் முன்மொழிந்துள்ள அனைவரையும் நினைவு கூருவதற்கான பொது நினைவுத்தூபியை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தமிழ்த் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.**

**பொதுநினைவுத்தூபி என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை வெகுவாகப் பாதிக்கும் செயல்பாடு என்பதுடன், போரை மேற்கொண்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களும் ஒரே இடத்தில் நினைவு கூர முனைவதானது முரண்நகையாகும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

நாட்டில் நீடித்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது குடியியல் குழப்பங்களால் உயிரிழந்த பொதுமக்கள், முப்படையினர் மற்றும் பொலிஸார், போராளிகள் உள்ளிட்ட அனைவரையும் நினைவு கூர கொழும்பில் பொது நினைவுத்தூபி அமைக்க ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்நிலையில், தமது கருத்துகளை வெளியிட்டுள்ளனர் தமிழ் தலைவர்கள்.

இலங்கை தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் கூறுகையில்,

முதலில் தென்னிலங்கை தலைவர்கள் இனங்களுக்கு இடையிலான பிரச்னைகளைத் தீர்த்திருப்பார்களாயின் இவ்விதமான மரணங்கள் ஏற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஆகவே, மோசமான முறையில் நடத்தப்பட்ட போரால் ஏற்பட்ட மரணங்கள் தொடர்பில் தலைவர்கள் பொறுப்புக்கூற வேண்டியது கட்டாயமானதாகின்றது.

அனைத்து மரணங்களையும் ஒரே கண்ணோட்டத்தில் பார்க்க முடியாது. படையில் உள்ள இராணுவத்தினர் போரில் மரணிப்பதற்கும், தாய் ஒருவர் படையினரிடத்தில் தனது மகனை ஒப்படைத்து விட்டதன் பின்னர் மரணிப்பதும், வலிந்து காணாமலாக்கப்படுவதும் முற்றிலும் மாறுபட்ட விடயங்களாகும்.

போரின் இறுதியில் படையினரின் அறிவிப்புக்கு அமைவாக இளைஞர், யுவதிகள் சரணடைந்துள்ளார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை.

இதேநேரம் இந்த விடயத்தில் மரணங்கள் பொதுவானது என்று கூறினாலும், தமிழ் மக்கள் முகங்கொடுத்துள்ள மரணங்களும், இழப்புக்களும் அதிகமானவை. அவர்கள் மிகவும் அனுதாப நிலைமையில் உள்ளார்கள். ஆகவே, அவ்விதமான பெரும் இழப்புக்களை சந்தித்த மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தி நினைவேந்தலைச் செய்வதற்குரிய சுதந்திரம் காணப்பட வேண்டும். அதனை கட்டுப்படுத்த முடியாது.

நினைவேந்தலைச் செய்வதற்கு ஒவ்வொருவருக்கும் அடிப்படை உரிமை உள்ளது. அது மதிக்கப்பட வேண்டும். அவர்கள் தாம் விரும்புகின்ற பகுதியில் ஒன்றுகூடி நினைவேந்தலைச் செய்வதற்கு முழுமையான உரித்துடையவர்கள். ஆகவே அதனைத் தடுத்து நிறுத்தி பொதுத் தூபி அமைப்பதானது சட்டத்தின் பிரகாரம் தவறானது. அத்துடன், பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை மேலும் பாதிப்படையச்செய்யும் செயல்பாடாகவே கருதுகின்றோம்.

அந்த வகையில், பொதுத் தூபி அமைக்கப்படுவதையும், அங்குதான் தமிழ் மக்கள் நினைவேந்தலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்த முனைவதையும் நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை - என்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் விக்னேஸ்வரன் எம். பி. கூறுகையில்,

என்னைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே பார்க்கின்றேன். இத்தனை ஆண்டுகளாக தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் எதிர்மறையாகச் சிந்தித்தவர்கள் தற்போது மாறுபட்டுச் சிந்திக்கின்றர்கள். இந்தச் சிந்தனையானது இதயசுத்தியுனானதாக இருக்க வேண்டும் -என்றார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பி. கூறுகையில்,

பொதுநினைவுத்தூபியை அமைத்து அராசாங்கம் சர்வதேசத்துக்கு இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்திவிட்டோம் என்று காண்பிப்பதற்கே முனைகின்றது.

அதேநேரம், இனப்படுகொலை புரிந்த படையினருக்கும், விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கும் இனத்திலிருந்து மடிந்தவர்களுக்கும் ஒரே இடத்தில் நினைவேந்தலைச் செய்ய முடியாது. அது இயற்கைக்கும் முரணானது.

ஏற்கனவே, தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து அதற்கு பொறுப்புக்கூறலில் இருந்து விலகியிருக்கும் அரசாங்கம் தற்போது தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கின்றது.

அதுமட்டுன்றி நிலைமாறு கால நீதிப்பொறிமுறையை மக்களின் விருப்பத்துக்கு மாறாக அமுலாக்க முனைவதாக அறிவித்த போதும் அதனைக் கூட நடைமுறைப்படுத்தாது காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

ஆகவே, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது மக்களுக்கான நினைவுத்தூபி கொழும்பில் அமைய முடியாது. அதுவொரு பொதுத்தூபியாக இருக்க முடியாது. அதற்கு நாம் ஒருபோதும் இணங்கப்போவதில்லை. எமது மக்களுக்கான நினைவேந்தல் தூபியானது முள்ளிவாய்க்காலில்தான் நிறுவப்பட வேண்டும் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் கூறுகையில்,

படையினரையும் அவர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களையும் ஒரே இடத்தில் நினைவு கூருவதற்கு முயல்வதானது கேலிக்கூத்தான செயல்படாகும். இந்த முயற்சியானது, உள்நோக்கம் கொண்டது என்பதோடு பாதிக்கப்பட்ட மக்களை மேலும் நோகச் செய்யும் செயல்பாடாகும்.

இந்த செயல்பாட்டால் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று கருதுவதானது வேடிக்கையானது. இந்த விதமான செயல்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது - நாம் முற்றாக நிராகரிக்கின்றோம் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி. தெரிவிக்கையில்,

அரசாங்கம் பொதுநினைவுத் தூபியை அமைப்பதன் ஊடாக பொதுமக்கள் தமது உறவுகளுக்காக தத்தமது பிரதேசங்களில் நினைவு கூரல் செயல்பாடுகளை முன்னெடுப்பதை தடுத்து நிறுத்துவதை பின்னணியில் கொண்ட கபடத்தனமான செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட எமது மக்கள் கொழும்பு வரை பயணித்து தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும் என்பதும், தமது இழப்புக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய படையினருக்கும் அதே இடத்திலேயே நினைவு கூரலைச் செய்ய வேண்டும் என்பதும் வெந்தபுண்ணில் வேலைப்பாய்ச்சும் செயற்படாகும்.இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது- என் றார்.

இதேசமயம், கருத்து வெளியிட்ட ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், அடக்குமுறைக்கு உள்ளாகிய இனமொன்று அடக்குமுறையிலிருந்து விடுதலையை அடைவதற்காக போராடியது. அந்தப் போராட்டத்தில் பல்வேறு இழப்புக்களைச் சந்தித்துள்ளது.

அவ்விதமான தமிழினம், எவ்வாறு அடக்குமுறையை மிகமோசமான உரிமை மீறல்களைச் செய்வர்களுடன் இணைந்து தமது உறவுகளை நினைவு கூர முடியும்.

அதுமட்டமல்ல, தமிழினம் என்ன காரணங்களுக்காக விடுதலை கோரி போராடியதோ அந்தக் காரணங்கள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. அவை நாளுக்கு நாள் தீவிரமடைகின்றன. அவ்விதமானதொரு சூழலில் பொதுநினைவுத்தூபி நினைவுகூரல் என்பது சூட்சுமங்கள் நிறைந்ததொரு நகர்வாகவே பார்க்க வேண்டியுள்ளது.

அத்துடன், படையினர் தமக்கான நினைவுத்தூபிகளை அமைத்து நினைவுகூரல்களைச் செய்கின்றார்கள். வெற்றி விழாக்களை நடத்துகின்றார்கள். அவர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்கள். அந்த தரப்புடன் எவ்வாறு தமிழ் மக்கள் ஒன்றிணைய முடியும் - என்றார். (ஐ)

# ‘தம்பிரான்’ இசைப்பேழை நேற்று வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், மே 29

‘தம்பிரான்’ இசைப்பேழை வெளியீட்டு நிகழ்வு மல்லாகம் பெரிய தம்பிரான் ஆலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஏழாலையூர் இளையதம்பி செல்வச்சந்திரனின் பாடல்வரி மற்றும் தயாரிப்பில் உருவான பாடலுக்கு பசுபதி கருணாகரன் இசையமைத்திருந்தார். பாடல்களை சாந்தன் கோகுலன் மற்றும் சுலக்சன் ஆகியோர் பாடியிருந்தனர்.



தம்பிரான் இசைப்பேழையின் முதல்பிரதியை டான் தொலைக்காட்சி குழுமத்தின் பிரதம செயல்பாட்டு அதிகாரி இளையதம்பி செல்வச்சந்திரனிடம் இருந்து ஆலய பிரதமகுரு அப்புத்துரை பெரியதம்பி பெற்றுகொண்டார். இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ-03)

# தேங்காயுடன் வந்த லொறி முருங்கனில் தடம்புரண்டது

மன்னார், மே 29

தம்புள்ளையில் இருந்து மன்னார் நோக்கி வந்த தேங்காய் லொறி முருங்கன் ரயில் கடவையில் விபத்துக்கு உள்ளானது.



இந்த விபத்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் நிகழ்ந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

விபத்துக்குள்ளான லொறியின் சாரதி காயங்களுடன் முருங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். லொறியில் பயணித்தவர்கள் தென்னிலங்கையை சேர்ந்தவர்களாவர்.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். சிறையில் கூரை மீதேறி போராடியவர் சமரசமானார்!

யாழ்ப்பாணம், மே 29

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் கூரைக்கு மேலேறி சிறைக் கைதி ஒருவர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளின் சமரச பேச்சுக்களை அடுத்து கூரையில் இருந்து இறங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் இருந்து வேறு சிறைச்சாலைக்கு தன்னை மாற்றுமாறு கோரியே அந்தக் கைதி போராட்டத்தில் ஈடுபட்டார் என தெரியவருகிறது.

யாழ்ப்பாண சிறைச்சாலை கூரை மேலேறி நேற்று முன்தினம் இரவு சனிக்கிழமை முதல் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலை அதிகாரிகளால் அவர் கீழே இறக்கப்பட்டார்.

குற்றசெயல்களில் ஈடுபட்ட அவர் குருவிட்ட சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வந்த நிலையில், யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் தனக்கு யாழ்ப்பாண சிறைச்சாலையில் அசௌகரியங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அதனால் தன்னை வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு கோரி அவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

மாத்தறையைச் சேர்ந்த புஷ்ப குமார (வயது 41) என்பவரே உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார். (ஐ)

# ஜூன் 8 முதல் மீளவும்போராட்டம் ஜே. வி. பியின் தலைவர் அறிவிப்பு!

கொழும்பு, மே 29

**எதிர்வரும் ஜூன் 09ஆம் திகதியுடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைத்து 3 மாதங்களாகின்றன. இதற்கு எதிராக தேசிய மக்கள் சக்தி ஜூன் 08ஆம் திகதி மீண்டும் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி தேர்தலை நடத்த வலியுறுத்தி தமது கட்சியின் வேட்பாளர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 08ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் செல்வர். இதன் பின்னர் அம்பாந்தோட்டை, அநுராதபுரம் மற்றும் கம்பஹா ஆகிய இடங்களில் மிகப்பெரிய போராட்டங்களை நடத்தப் போவதாக அந்தக் கட்சி கூறியுள்ளது.

போராட்டங்களின் பின்னர் கொழும்பை முற்றுகையிட்டு பெரும் போராட்டத்தை முன்னெடுக்க தமது கட்சி தயாராக இருக்கிறது என்றும் அவர் வலியுறுத்தினார்.

பலபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொகுதி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அநுரகுமார திஸநாயக்க மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

# பொதுப் பயன்பாடுகள் குழுவுக்கு விரைவில் தலைவர் நியமனம்!

கொழும்பு, மே 29

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு விரைவில் ஒருவர் நியமிக்கப்படுவார் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பான் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது ஜனாதிபதி நாடு திரும்பியுள்ளார். இந்த நிலையில், விரைவில் அவர் ஆணைக்குழுவின் தலைவரை நியமிப்பார் என்றும் அவர் கூறினார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஜனக ரத்நாயக்கவை நீக்குவது தொடர்பான கடிதத்தை நிதியமைச்சின் செயலாளர் அவருக்கு அனுப்பி வைத்துள் ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கால்நடைகளை கொண்டுசெல்ல தடை விதிப்பு!

கொழும்பு, மே 29

வட மேல் மாகாணத்தில் இருந்து வெளி மாகாணங்களுக்கு கால்நடைகளை கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகளில் கால்நடைகள் இடையே தோல் கழலை நோய் பரவி வருவதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் வடமேற்கு மாகாண பதில் பணிப்பாளர் பி. எஸ். சி பெரேரா தெரிவித்துள்ளார். (ஐ)

# தீப்பற்றி எரிந்த குழாய்கள்; 6 மாணவர்கள் கைதாகினர்

கொழும்பு, மே 29

கேகாலை, அரநாயக்கவில் அசுபினி எல்ல நீர் விநியோகத் திட்டத்துக்காக கொண்டுவரப்பட்ட தண்ணீர் குழாய்கள் தீப்பிடித்து எரிந்த சம்பவம் தொடர்பில் 6 பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் குறித்த நீர் விநியோகத் திட்டம் திறந்து வைக்கப்பட்டதுடன் அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இந்த நீர் குழாய்கள் தீப்பிடித்து எரிந்தன.

இதன்படி, நீர் குழாயில் தீப்பற்றிய சம்பவம் தொடர்பில் 6 பாடசாலை மாணவர்களிடம் அரநாயக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் குறித்த மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த 6 பாடசாலை மாணவர்களும் அப்பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயில்கின்றனர் என்றும், இவர்கள் இவ்வருடம் சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது. (ஐ)

# முக்கிய பிரமுகர்களின் வழி ஊடாக பயணிப்போருக்கும் இனி சோதனை!

கொழும்பு, மே 29

பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பிரமுகர்களின் வழி ஊடாக பயணிக்கும் பயணிகளின் பயணப்பொதிகள் சுங்கப் பிரிவினரால் இனிவரும் காலங்களில் ஸ்கான் சோதனை செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமால் கடந்த செவ்வாய்க்கிழமை நாட்டுக்குள் தங்கம் மற்றும் கைபேசிகள் கடத்தப்பட்டதன் நேரடி விளைவாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

முக்கிய பிரமுகர்களின் வழியாக செல்பவர்கள் அல்லது வருபவர்கள் தொடர்பில் ஏற்கனவே உள்ள நடைமுறைகள் பின்பற்றப்படும். எவ்வாறாயினும், அதன்பிறகு, தடைசெய்யப்பட்ட பொருட்களுக்கான ஸ்கானிங் இயந்திரம் மூலம் சுங்கப்பிரிவினர், அவர்களின் பொதிகளை பரிசோதனை செய்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்கிழமை, பாராளுமன்ற உறுப்பினர் சப்ரியிடம் இருந்து 3.4 கிலோ மதிப்புள்ள தங்கம் மற்றும் 91 கைபேசிகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனையடுத்து சுங்கத்துறை அவருக்கு 74 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்தது. இதன்போது அவருடன் வந்த "உதவியாளர்" என்று கூறப்பட்டவரிடமிருந்து 19 கைபேசிகள் மீட்கப்பட்டன. அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை சப்ரி இந்த வருடம் மார்ச் மாதம் முதல் ஆறு தடவைகள் டுபாய்க்கு பயணம் செய்துள்ளார் என்று சுங்க விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அத்துடன், அவர் ஒரு பணக்கார கடத்தல் குழுவின் பொருட்களை எடுத்து வருபவராக செயல்பட்டிருக்கலாம் என்று சுங்கத்துறை சந்தேகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பன்றிகளிடையே வைரஸ் மேல் மாகாணத்தில் பரவல்!

கொழும்பு, மே 29

மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் பன்றிகள் மத்தியில் வைரஸ் நோய் பரவி வருகிறது என்று கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் நோய் தொற்று நோயாக உருவாகவில்லை என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

பன்றிகளின் சுவாச மண்டலத்தில் ஏற்படும் இந்த வைரஸ் நோய் ரி. ஆர். ஆர். எஸ். என்ற பெயரால் அறியப்படுவதாக திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவர ஹேமலி கொத்தலாவல தெரிவித்தார்.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட பன்றிகள் உயிரிழக்கின்றன. இந்த நோய்க்கான தடுப்பூசிகளை உடனடியாக இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், இந்த வைரஸ் மனிதர்களுக்கு பரவும் அபாயம் இல்லை என அவர் கூறினார். (ஐ)

# தினேஷ் ஷாப்டரின் உடலம் மீதான முதல்கட்ட சோதனை நிறைவடைவு

கொழும்பு, மே 29

மர்மமான முறையில் உயிரிழந்த பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் சடலம் மீதான முதல்கட்ட பரிசோதனைகள் நிறைவடைந்துள்ளன என்று கராப்பிட்டி போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி ரொஹான் டி. ருவன்புர தெரிவித்துள்ளார்.

சடலம் தொடர்பான மேலதிக பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனை குறித்த முழுமையான அறிக்கையை வெளியிடுவதற்கு இன்னும் 2 மாதங்கள் செல்லும். முதற்கட்ட பரிசோதனை அறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படும் - என்றும் சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் உயிரிழப்பு தொடர்பில் தடயவியல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய விசேட சட்ட மருத்துவ அதிகாரிகளால், நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ஷாப்டரின் சடலம் கடந்த 25 ஆம் திகதி தோண்டி எடுக்கப்பட்டது.

பொரளை பொது மயானத்தில் தனது காரில் கைகள் கட்டப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி தினேஷ் ஷாப்டர் மீட்கப்பட்டார். கொழும்பு தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட தினேஷ் ஷாப்டர் அன்றைய தினம் இரவு உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிக விலைக்கு அரிசி விற்பனை வர்த்தக நிலையம் சுற்றிவளைப்பு!

கொழும்பு, மே 29

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த வர்த்தக நிலையம் ஒன்றை நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டது.

கொழும்பு - தெமட்டகொடையில் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பின்போது, அதிக விலைக்கு விற்பனை செய்ய தயார் செய்யப்பட்டிருந்த 5 கிலோ நிறைவுடைய 250 கீரி சம்பா அரிசி மூடைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கீரி சம்பா ஒரு கிலோவுக்கு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலை 260 ரூபாயாக உள்ள போதிலும், குறித்த வர்த்தக நிலையத்தில் ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 270 ரூபாய்க்கும் அதிகமான விலைக்கு விற்பனை செய்யப்பட்டதாக மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# நாடு திரும்பினார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, மே 29

சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை முடித்துக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார்.

இதன்படி நேற்று முன்தினம் இரவு 11.05 மணியளவில் மலேசியன் எயார் லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந் தடைந்தார். (ஐ)

## ஜி:7 உச்சி மாநாடு : உக்ரைன் - இந்தியா பேச்சு

# ரஷ்யாவுடன் அமைதி பேச்சுக்கு பிரதமர் மோடியின் வகிபாகம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஜப்பானில் நடந்த ஜி 7 உச்சிமாநாட்டில் இந்தியா மற்றும் உக்ரைன் தலைவர்களுக்கு இடையே யான சந்திப்பு புது டில்லி மற்றும் மாஸ்கோ இடையி லான உறவுகளின் போக்கை மாற்றக்கூடும் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

ஜப்பானில் நடைபெற்ற ஜி 7 மாநாட்டின் போது உக் ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் பிரத மர் நரேந்திர மோடி, மே 20 அன்று கலந்துரையாடினார். கடந்த ஆண்டு பெப்ரவரியில் உக்ரைன் - ரஷ்ய மோத லிற்குப் பிறகு இரு தலைவர்களுக்கும் இடையே நடந்த முதல் நேருக்கு நேர் உரையாடல் என்பதால் இந்த சந்திப்பு ஒரு முக்கியமான மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

இரு தலைவர்களின் உரையாடலின் போது, உக்ரைன் போர் உலகிற்கு ஒரு பெரிய பிரச்சினை என்றும் இந்தப் போரினால் உலகமே பாதிக்கப்பட்டுள்ளது என்று உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி பிரதமர் நரேந்திர மோடியிடம் தெரிவித்தார்.

இது ஒரு போர் பிரச்சினை மட்டுமல்ல, பொருளாதா ரம், அரசியல் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றின் பெரிய பிரச்சினை. இந்தப் போரைத் தீர்க்க இந்தியாவும் தானும் என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்றும் பிரதமர் மோடி பதிலுக்கு கூறினார்.

அத்துடன் உக்ரைன் பிரச்சனை என்பது தனக்கு மனி தாபிமான பிரச்சினை என்று பிரதமர் மோடி விவரித்தாக ஊடக அறிக்கைகள் கூறுகின்றன.

ஜி 7 மாநாட்டில் பங்கேற்குமாறு ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா மோடிக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தியாவைத் தவிர மற்ற ஏழு நாடுகளுக்கு ஜப்பான் அழைப்பு அனுப்பியது. ஜி7 மாநாட்டில் சீனாவும் ரஷ்யாவும் இடம்பெறாது தனிமைப் படுத்தியுள்ளனர்.

அதாவது, ஜி7 மாநாடு ஒருவகையில் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் எதிரான மேற்கத்திய நாடுகளின் மாபெரும்



அமைப்பாக தற்போது மாறியுள்ளது.

**ஏழு பெரிய பொருளாதார நாடுகளின் - ஜி7 மாநாடு:**

ஜி7 மாநாடு என்பது உலகின் ஏழு பெரிய பொருளா தார நாடுகளின் தலைவர்களின் கூட்டமாகும். இந்த குழு வில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளனர்.

பொருளாதார ஒத்துழைப்பு, சர்வதேச பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு உலகளாவிய பிரச்சினைகளில் இந்த தலைவர்கள் தங்கள் முயற்சிகளை விவாதிக்கவும் ஒருங்கி ணைக்கவும் உச்சிமாநாடு ஒரு தளத்தை வழங்குகிறது.

ஜி7 அமைப்பில் இருந்து 2014 இல் ரஷ்யா வெளியே றுவதற்கு முன்பு வரை ஜி 8 என அறியப்பட்டது. இதன் தலைவர்கள் வெளிப்படையான விவாதங்களில் ஈடுபட வும், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும் மற்றும் உல களாவிய சவால்களை சாமாளிப்பதில் பொதுவான நிலை யைக் கண்டறியவும் ஒரு மன்றத்தை பிரதிநிதித்துவப்ப டுத்துகிறது.

உச்சிமாநாடுகள் வழக்கமாக முறையான மற்றும் முறை சாரா கூட்டங்களின் தொடர்களைக் கொண்டிருக்கும். ஒரே நேரத்தில் இருதரப்பு விவாதங்களும் நடைபெறும். தலைவர்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்க்கவும் வலுவான உறவுகளை வளர்க்கவும் இவ் அமைப்பு அனும திக்கிறது.

ஜி 7 உறுப்பினர்களைத் தவிர, உச்சிமாநாட்டில் பெரும்பாலும் பிற நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்பு களின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக அல்லது பார்வை யாளர்களாக அழைக்கின்றன. இது ஒரு பரந்த முன்னோக்கு



மற்றும் உள்ளடக்கிய உரையாடலை அனுமதிக்கிறது.

**உக்ரைன் - இந்தியாவின் நிலைப்பாடு:**

உக்ரைன் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எந்தவொரு சமாதான நடவடிக்கையிலும் இந்தியா தயாராக இருப்ப தாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜேர்மன் சான் சிலர் ஓலாப் ஸ்கோல்ஸை புதுடில்லியில் சந்தித்தபோது கூறினார்.

ஆயினும் உக்ரைன் விவாதத்தில் இந்தியா ஐநா பொதுச் சபையில் வாக்களிக்கவில்லை. கடந்த பெப்ரவரி 23 அன்று, ஐநா சாசனத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப உக்ரேனில் ஒரு விரிவான, நியாயமான மற்றும் நீடித்த அமைதியை விரைவில் அடைய வேண்டியதன் அவசி யத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்தது.

இதன் போது 193 உறுப்பினர்களைக் கொண்ட பொதுச் சபையில் உக்ரைன் மற்றும் அதன் ஆதரவாளர்களால் முன்வைக்கப்பட்ட வரைவுத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, ஆதரவாக 141 வாக்குகளும் எதிராக ஏழு வாக்குகளும் கிடைத்தன.

உக்ரைன் நெருக்கடியில் இந்தியாவின் நிலைப்பாடு தெளிவின்றி இருப்பினும், ஐ. நா சபையில் பல கட்டத் தில் வாக்களிப்பதில் இருந்து விலகி இருப்பது ஒரு கொள்கை ரீதியான நிலைப்பாடு, தற்போது புதுடில்லிக்கு மிகவும் கடினமாகி வருகிறதை காணலாம்.

இந்த சகாப்தம் போருக்கான சகாப்தம் இல்லை என்று பிரதமர் மோடியின் அறிக்கையை ஜனாதிபதி புடின் பாரிய அளவில் கவனிக்கவில்லை. மேலும் உக்ரைன் இந்தியாவை ஒரு நடுநிலையான மத்தியஸ்தராக பார்க்கி றதா என்பதும் தெளிவாக புலப்பட இல்லை. இருப்பி னும் புது டில்லி கூறும் உலகளாவிய மற்றும் பிராந்திய தலைமை இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப் பாட்டின் அடிப்படைக் கொள்கைகளில் வேறுபட்டதாக தோன்ற முடியாத நிலமை தற்போது ஏற்பட்டுள்ளது.

**இந்தியாவுக்கு நன்றி கூறும் ஜெலென்ஸ்கி:**

மே 20 அன்று ஹிரோஷிமாவில் ஜி-7 உச்சிமாநாட் டின் போது, உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகி யோர் கிராண்ட் பிரின்ஸ் ஹோட்டலில் சந்தித்த பின்னர், அவரது பதிவில், ஜப்பானில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பேசினேன். உக்ரேனிய நாட்டில் அமைதி உருவாக்கும் முன்முயற்சி பற்றி அவரிடம் விரி வாக பேசினேன். அதனை செயல்படுத்த இந்தியாவை அழைத்தேன். மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் மற்றும் நடமாடும் மருத்துவனைகளில் உக்ரைனின் தேவைகள் குறித்து நான் பேசினேன் என்றும் பதிவிட் டுள்ளார்.

உக்ரைன் நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை ஆதரித்ததற்காக நன்றி கூறுகிறேன். குறிப்பாக, சர்வதேச அமைப்புகளின் மேடைகளில் உக்ரைனுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கியதற்காக இந்தியாவுக்கு நன்றி கூறுகிறேன் என அவர் தெரிவித்துள் ளார்.

முன்னதாக, ஜி7 மாநாட்டில் வீடியோ வாயிலாக ஜெலென்ஸ்கி பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் நேரடியாக ஜப்பான் வந்தமை குறிப்பி டத்தக்கது.

அத்துடன் அணுகுண்டால் அழிந்த ஹிரோஷிமா நகர சந்திப்பு இந்தியாவை ஜனநாயக நாடுகளின் முகா மிற்கு நெருக்கமாகக் கொண்டுவர ஒரு வாய்ப்பை வழங் கியதாக மேலும் கூறினார். இந்த மோதலுக்கு முற்றுப் புள்ளி வைக்க ரஷ்யாவுடன் செல்வாக்கு அதிகம் உள்ள இந்தியா முயற்சிக்க வேண்டும் என்று தாம் நம்புவதாக வும் கூறியுள்ளார்.

**இந்தியாவின் தெளிவற்ற நிலைப்பாடு:**

கடந்த வருட பெப்ரவரி 2022 இல் உக்ரைனை ரஷ்யா தாக்கியதில் இருந்து ஜி-7 நாடுகள் ரஷ்யாவைக் கடுமை யாக கண்டித்தன.

ஜி-7 நாடுகள் ரஷ்ய போர் இயந்திரத்தை பட்டினி போடவும், பொருளாதார ஆதரவை துண்டிக்கவும் முழு மையாக முயன்றன.

இப்போரில் இந்தியா தெளிவற்ற நிலைப்பாட்டை எடுத்துள்ளதாக மேற்குலகால் குற்றஞ்சாட்டப்பட்டது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடனான தனது நட்பு பிரிக்க முடியாதது என இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளதும், ரஷ்யாவிடம் இருந்து இந்தியா மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்கி, ரஷ்ய ஆயு தங்களையே பெரிதும் நம்பியுள்ளதும் அறிந்ததே.

இந்தப் பேச்சுக்களில் உக்ரைனில் உள்ள போரின் மூலோபாய நிலையை மோடியால் மாற்ற முடியும் என்று பரவலாக கருதப்பட்டது. அதனால்தான் ஹிரோஷிமா வில் மோடியை முதலில் சந்திக்க வேண்டும் என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

உலகம் இப்போது அணு ஆயுதப் பரவலைப் பற்றி மட்டுமல்ல, அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைப் பற்றியும் கவலைப்பட வேண்டி உள்ளது. அணு ஆயுதங் களைப் பயன்படுத்துவதை நிராகரிக்கப் போவதில்லை என்று புடின் கூறியது இன்னமும் ஆபத்தின் அறிகுறியை வெளிப்படுத்துகிறது.

ஹிரோஷிமா அமைதி நினைவு அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டு உச்சிமாநாட்டைத் திறந்த பல நாட்டுத் தலைவர்கள், உலகின் மற்ற நாடுகளுக்கு ஒரு நினைவூட் டலாக, அணு ஆயுதங்களின் பயன்பாட்டின் கொடூரமான விளைவுகளை ஜப்பானை விட எந்த நாடும் சிறப்பாக வெளிப்படுத்த முடியாது என்று வெளிப்படுத்தினர்.

இந்த உச்சிமாநாட்டில் ஜெலென்ஸ்கியை வருகை தர வைத்தது, உலக அரங்கில் ஜப்பானின் முக்கிய இருப்புக்கு காரணமாக இருக்கலாம். ஜப்பான் ஒரு முன்னணி பொரு ளாதாரம் மட்டுமல்ல, புவிசார் அரசியலில் ஒரு தலைவ



ராக செயல்பட முடியும் என்பதனை காட்டியுள்ளது.

அத்துடன் ஜெலென்ஸ்கியை அழைப்பது மற்றும் இந்தியாவை வெற்றிகரமாக அனுகுவது உக்ரைன் போரில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

எதிர்வரும் செப்டம்பரில் நடைபெறும் ஜி-20 மாநாட் டில் உக்ரைன் முக்கிய விவாதப் பொருளாக அமையும் தருணத்தில், இந்தியா தலைமை வகிக்க உள்ளது. மோடி தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு உக்ரைனில் அமைதிக்கான விதிமுறைகளை வகுக்க இது ஒரு வாய்ப்பு என்றும் சில மேற்குலக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

எதிர்கால நிகழ்வுகள் நிச்சயமற்றதாக இருந்தாலும், அமைதியை ஏற்படுத்துபவராக செயல்பட ஜப்பான் இந்தியாவுக்கு வாய்ப்பளித்துள்ளது என்பது உண்மையே.

ரஷ்யாவுடன் செல்வாக்கு அதிகம் உள்ள இந்தியா அமைதி முயற்சிக்கு தன்னை பயன்படுத்துமா என்பதை காலமே பதில் சொல்லும். இந்த கொடூர மோதலுக்கு முற்றுப்புள்ளியை வைக்க இந்தியா முயன்றால் மோடி யின் பெயர் வரலாற்றில் நிலைக்கும். ●

# சீனக் குற்றச் செயல்களின் கேந்திர நிலையமா இலங்கை?

அண்மையில் இலங்கையில் இணையவழி நிதி மோசடியில் ஈடுபட்ட 39 சீன பிரஜைகளை அளுத்கம பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸ் அறிக்கைகளின்படி, சந்தேக நபர்கள் பல மாதங்களாக இணையம் ஊடாக பல்வேறு நாடுகளில் உள்ள தனிநபர்களிடமிருந்து மில்லியன் கணக்கான டொலர்களை சட்டவிரோதமாக பெற்றுள்ளனர்.

அளுத்கம, களுஅமோதர பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியொன்றில் குறித்த குழுவினர் தங்கியிருந்ததாகவும், பல்வேறு தூதரகங்கள் ஊடாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்டபோது, சீனப் பிரஜைகள் பல ஸ்மார்ட்போன்கள் மற்றும் பணத்தை வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது, அவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இணையவழி மோசடிக்காக சீன நாட்டவர்கள் வேறொரு நாட்டில் தடுத்து வைக்கப்படுவது இந்த மாதத்தில் இது இரண்டாவது முறையாகும். அதிகரித்து வரும் இந்த பிரச்சினையை சமாளிக்கவும், மேலும் பரவாமல் தடுக்கவும் அதிகாரிகள் முனைப்புடன் செயற்பட வேண்டும். இதுபோன்ற மோசடி நடவடிக்கைகள் ஒழிக்கப்படுவதை உறுதி செய்வது அவசியம், இது அனைவருக்கும் பாதுகாப்பான இணையச் சூழலுக்கு வழிவகுக்கும்.

முன்னதாக, காத்மாண்டுவின் வெவ்வேறு பகுதிகளில் இதேபோன்ற நடவடிக்கைகளுக்காக 122 சீன பிரஜைகளை கைது செய்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இணையவழி மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஒன்பது சீன நபர்களை நேபாள பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் இலங்கையில் கைது செய்யப்பட்டவர்களிடத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிராகரம், இந்த முறை, சந்தேக நபர்களுக்கு எதிராக இணையவழி மோசடி வழக்கைத் தொடர வலுவான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் வாட்ஸ்அப் மூலம் மக்களை கவர்ந்திழுக்கும் சலுகைகளை வழங்குவார்கள், பின்னர் டெலிகிராம் மூலம் இணையவழி வகுப்புகளில் சேருவதற்கு அழைத்து அவர்களை நம்ப வைப்பார்கள் என்று பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளர்.


இந்த மோசடித் திட்டத்தில் பாதிக்கப்பட்ட ஒருவர் சுமார் 4.7 மில்லியன் ரூபாவை இழந்துள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளதோடு குறித்த பாதிக்கப்பட்ட நபரை 30சதவீதத்திற்கு மேல் நிகர லாபம் தரும் இணையவழி வணிகத்தில் முதலீடு செய்வதாகக் கூறியே ஏமாற்றியதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுபோன்ற இணையவழி மோசடி சம்பவங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதிச் சுமை மட்டுமல்ல, உலகளாவிய இணையப் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருக்கிறது.

எனவே, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், இதுபோன்ற மோசடி நடவடிக்கைகளைத் தடுக்கும் நடவடிக்கைகளை செயற்படுத்துவதும் அவசியம். குற்றவாளிகளுக்கு எதிராக அதிகாரிகள் விரைவான நடவடிக்கை எடுப்பது மற்றும் அவர்களின் குற்றங்களுக்கு அவர்கள் பொறுப்பேற்கப்படுவதை உறுதி செய்வதும் முக்கியமாகின்றது.

சந்தேகநபர்களான சீனப்பிரஜைகள் இரண்டு மாதங்களுக்கும் மேலாக மோசடி செய்து, மில்லியன் கணக்கான மக்களை ஏமாற்றி, இலங்கைக்கு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். போதைப்பொருள் கடத்தல், மனிதக் கடத்தல் மற்றும் சட்டவிரோத சூதாட்டம் போன்ற சீனப் பிரஜைகளை உள்ளடக்கிய குற்றச் செயல்கள் உள்நாட்டில் அதிகரித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.





இலங்கையில் சீன முதலீடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் அதிகரிப்பு மற்றும் சுற்றுலாப் பயணிகளாக உள்வரும் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக அதிகளவான சீன பிரஜைகள் காணப்படுகின்றார்கள். அவர்களில் பெரும்பாலோர் சட்டத்தை மதிக்கும் குடிமக்கள் என்றாலும், சிறுபான்மையினர் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இப்பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது, அண்மைய ஆண்டுகளில் பலரை கைது செய்து வருகிறது.

எவ்வாறாயினும், சீன நிதியுதவி திட்டங்களில் பணியாற்றுவதற்காக சீன குற்றவாளிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவது தவறான முன்னுதாரணமாகின்றது. மேலும் இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு குறித்து கேள்விகளை எழுப்புகிறது. வெளிநாட்டுப் பிரஜைகளின் குற்றச் செயல்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்த போதிலும், அது தொடர்ந்து கரிசனை செலுத்த வேண்டியதாக உள்ளது.

> **காத்மாண்டுவின் வெவ்வேறு பகுதிகளில் இதேபோன்ற நடவடிக்கைகளுக்காக 122 சீன பிரஜைகளை கைது செய்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இணையவழி மோசடியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் ஒன்பது சீன நபர்களை நேபாள பொலிஸார் கைது செய்தனர்.**

சீன நிறுவனங்கள் தங்கள் திட்டங்களுக்கு உதவ மலிவான தொழிலாளர்களை தேடுவது இந்த போக்குக்கு ஒரு காரணமாக இருக்கலாம். குறைந்த கூலிக்கு வேலை செய்ய தயாராக இருக்கும் சீன குற்றவாளிகளை கொண்டு வருவதன் மூலம், இந்த நிறுவனங்கள் தொழிலாளர் செலவில் பணத்தை சேமிக்க முடியும்.

எவ்வாறாயினும், இந்த நடைமுறை நெறிமுறையற்றது மட்டுமல்ல, இது இலங்கை பிரஜைகளின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தலாம். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய உறவே இலங்கையில் சீனக் குற்றவாளிகளின் ஊடுருவலுக்கு மற்றொரு காரணமாக இருக்கலாம்.

இந்தப் போக்கின் பின்னணியில் உள்ள காரணங்கள் எதுவாக இருந்தாலும், சீனக் குற்றவாளிகள் இலங்கையில் இருப்பது கவலைக்குரியது என்பது தெளிவாகிறது. இந்த நபர்கள் இலங்கை பிரஜைகளின் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கலாம், மேலும் அவர்கள் நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கும் பங்களிக்கலாம். அது மட்டுமன்றி இலங்கையை குற்றச்செயல்களின் கேந்திரமாகக்கூட மாற்றலாம். ●



# தமிழர் தாயகத்தில் இனப்பரம்பலை அழிக்கவே மகாவலி அபிவிருத்தி சபை செயல்படுகின்றது!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி. சாடல்

வவுனியா, மே 29

மகாவலி அதிகார சபையின் செயல்பாடு என்பது தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர்களின் இனப் பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் கொண்டுவருவதற்கும் தமிழர்களை இன ரீதியாக இல்லாமல் செய்வதற்குமான இன அழிப்பின் நீண்ட கால தந்திரமான செயல்பாடுதான் இந்த மகா வலியின் செயல்பாடு. இதை முழுமையாக கண்டிப்பதுடன் எதிர்ப்பதாக இலங்கை தமிழரசு கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் தனது பணிமனையில் செய்தியாளர்களை சந்தித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

மகாவலி அதிகார சபையால் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் 1988ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் 14 கிராம அலுவலர் பிரிவுகள் அபகரிக்கப்பட்டு யுத்தத்தில் மக்கள் இடம் பெயர்ந்த போது முழுமையாக அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவிவெலி ஓயா என்ற ஒரு புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கை பிரிக்கின்ற நோக்கத்துக்காக இந்த மகாவலி அதிகார சபை புதிய ஒரு பிரதேச செயலகத்தை உருவாக்கி பிற்பாடு கொக்கிளாய் முதல் செம்மலை வரை இருக்கின்ற 6 கிராம சேவகர் பிரிவுகளை அபகரிக்க முயற்சி எடுத்த போது எங்களுடைய தொடர் அழுத்தம் காரணமாக தற்காலிகமாக அந்தத் திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மகாவலி என்பது தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களையும் சிங்கள இனப் பரம்பலையும் செய்வதற்காக அரசாங்கத்தால் நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு செயல்பாடு அந்த வகையில் தற்பொழுது மகாவலி “ஜே” வலயம் என்ற ஒன்றை புதிதாக உருவாக்குவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் 7 கிராம அலுவலர் பிரிவுகளும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் இருக்கின்ற 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளும், மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடங்கலாக மொத்தம் 37 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி மகாவலி அதிகார சபை புதிய வர்த்தமானி அறிவித்தல் செய்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது .

இவ்விடயத்தை எதிர்த்து நான் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை முன் வைத் திருக்கிறேன். அதற்கு நீர்ப்பாசன அமைச்சர் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின்போது பதில் அளிப்பதாக கூறியிருக்கிறார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாலியாறு, அந்தோனியார்புரம், ஆத்திமோட்டை, இலுப்பைக் கடவை, கள்ளியடி, கூராய், கோவில் குளம், காயா நகர், பெரிய மடு கிழக்கு, பெரிய மடு, தெற்கு பள்ளமடு, விடத்தல்தீவு கிழக்கு, விடத்தல் தீவு மேற்கு,விடத்தல் தீவு வடக்கு, விடத்தல்தீவு மத்தி ஆகிய கிராமங்களையும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் அனிச்சங்குளம், பாரதி நகர், புகழேந்தி நகர் திருநகர், யோகபுரம் மத்தி, யோகபுரம் கிழக்கு,ஜோக புரம் மேற்கு கிராமங்களும் ,மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் அம்பாள் புரம், கரும்புள்ளியான், கொள்ளிவிளாங்குளம், மூன்று முறிப்பு, நட்டாங்கண்டல், ஒட்டறுத்த குளம், பாலிநகர், பாண்டியன் குளம், பொன்நகர், பூவரசங்குளம் ,செல்வபுரம் ,சீராட்டி குளம், சிவபுரம் வன்னி விளாங்குளம், விநாயகபுரம் ஆகிய 37 கிராம அலுவலர் பிரிவுகளையும் “ஜே” வலயத்தின் ஊடாக மகாவலி அதிகார சபையில் கீழ் கொண்டு வந்து இந்த நிலங்களில் இருக்கும் குளங்களின் கீழ் காணப்படுகின்ற வன இலாக திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் உள்ள காணிகளை அபகரித்து அதன் மூலம் சிங்கள மக்களுக்கு அதை நீண்ட கால குத்தகை வழங்குவதோ அல்லது அந்த பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றுவதுதான் மிக வேகமாக மகாவலி அதிகார சபை செய்யப்படுகின்றது.

மகாவலி எல் வலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1988 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நிர்ணயம் செய்யப்பட்டது. இன்றைக்கு 35 வருடங்கள் கடந்தும் மகாவலி தண்ணீர் இன்னும் வரவில்லை. மகாவலி தண்ணீர் அங்கு வராமல் இருக்கும்போது அங்கு புதிய சிங்கள பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டு சிங்கள மக்களும் குடியேற்றப்பட்டுள்ளார்கள்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் இந்தத் திட்டம் என்பது தமிழர்களுடைய இன பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை இங்கு கொண்டுவருவதற்கும் தமிழர்களை இனரீதியாக இல்லாமல் செய்வதற்கு இன அழிப்பின் ஒரு நீண்ட கால தந்திரமான செயல்பாடுதான் இந்த மகா வலி அதிகார சபையின் செயல் பாடு.

இதை முழுமையாக நாங்கள் கண்டிக்கின்றோம். முழுமையாக எதிர்க்கின்றோம். இதை நடைமுறைப்படுத்த விடாமல் செய்வதற்கு பல முயற்சி செய்துள்ளேன். பாராளுமன்றத்தில் பிரேரணையை முன் வைத்துள்ளேன். அதையும் மீறி ஜனாதிபதியை சந்திப்பதற்காக நான் அனுமதி கேட்டிருக்கின்றேன். அவரிடம் குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்துவேன்.

அதையும் மீறி மகாவலி “ஜே” வலயம் மகாவலி அதிகார சபையினால் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்டால் வெகுஜன போராட்டத்தின் ஊடாக மக்கள் போராட்டத்தின் ஊடாக முழுமையாக முல்லைத்தீவு , மன்னார் மக்கள் இணைந்ததை இத் திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.






# மாணவிக்கு பாலியல் தொல்லை; அக்கரைப்பற்றில் இளைஞர் கைது!

அக்கரைப்பற்று, மே 29

**பிரத்தியேக வகுப்புக்கு சென்ற மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த, மாணவியை தாக்கிய குற்றச்சாட்டுகளில் 19 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பெரும் குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம். எஸ். அப்துல் மஜீட் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் மாலை பிரத்தியேக வகுப்புக்கு சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவிக்கே பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதில், தாக்கப்பட்ட மாணவி அக்கரைப்பற்று ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாணவியின் பெற்றோர் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் வீதிகளில் இளைஞர்கள் சிலர் மாணவிகளுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து வருகின்றனர். இதனால் மாணவிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். சில மாணவிகள் கல்வியை இடைநடுவில் கைவிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாடுகளை தொடர்ந்து, மாணவிகளுக்கு வீதிகளில் தொந்தரவு செய்பவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# காரைதீவு கண்ணகை அம்மன் திருக்குளிர்த்தி இன்று ஆரம்பம்!

காரைதீவு, மே 29

காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த வைகாசி திங்கள் திருக்குளிர்த்தி சடங்கு பெருவிழா இன்று திங்கட்கிழமை மாலை கடல் தீர்த்தம் எடுத்துவந்து திருக்கல்யாணக்கால் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தச் சடங்கு பெருவிழா தொடர்ந்து 8 தினங்கள் நடைபெற்று ஜூன் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30மணிக்கு திருக்குளிர்த்தி பாடலுடன் நிறைவடையும் என்று ஆலய தர்மகத்தாக்களுள் ஒருவரான பரமலிங்கம் இராஜமோகன் தெரிவித்தார்.

30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சடங்கு பூஜையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் நடைபெறும். தொடர்ந்து புதன்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மதியம் ஒரு மணிக்கு பூசையும் மாலை 7மணிக்கு சடங்கு பூசையும் ஊர்சுற்றுக்காவியம் பாடலும் நடைபெறும்.

05ஆம் திகதி திஙகட்கிழமை பொங்கலுக்கான நெல் குத்தும் வைபவம் நடைபெறும். மறுநாள் செவ்வாய் அதிகாலை குளிர்த்தி பாடப்பெறும்.

(ஐ)

# மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண நடமாடும் சேவை



மட்டக்களப்பு, மே 29

மட்டக்களப்பு மக்கள் மற்றும் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களின் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு அமைச்சுடன் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து இந்த நடமாடும் சேவையை நடத்தின.

இந்த நடமாடும் சேவையில், குடியுரிமை, பிறப்பு, விவாகம், இறப்பு போன்ற சான்றிதழ்களை பதிவு செய்தல் மற்றும் தேசிய அடையாள அட்டை தொடர்பான பிரச்னைகள், இழப்பீடுகளுக்கான நட்ட ஈட்டை பெற்றுக் கொள்ளல், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை, மத்தியஸ்தம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம், காணி தொடர்பான விசேட மத்தியஸ்த சபை, சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இதில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அதிபர்கள் நீதி அமைச்சு, மாவட்ட செயலக மற்றும் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(ஐ)

# தேசிய மர நடுகை வாரம் கிழக்கில் நேற்று ஆரம்பம்!

திருகோணமலை, மே 29

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு தேசிய மரநடுகை தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலை நகர சபை வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன், ஆளுநரின்

உதவி செயலாளர் தெய்வேந்திரன், கிழக்கு மாகாண செயலாளர்கள் உட்பட கிழக்கு மாகாண அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் உட்பட நகர சபையின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (ஐ-04)



# பயங்கரவாத சட்டத்தை எதிர்த்து கையெழுத்து சேகரிப்பு ஆரம்பம்




காத்தான்குடி, மே 29

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் முற்றாகக் கைவிட வேண்டும் என்று கோரி கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடியிலுள்ள ஜும்ஆப் பள்ளிவசல்களில் நடைபெற்றது.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை நடைபெற்றது.

# காரைதீவு கடற்கரையோரம் தூய்மைப்படுத்தப்பட்டது!



காரைதீவு, மே 29

அம்பாறை - காரைதீவு பிரதேச சபையால் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய கடற்கரைப் பிரதேசங்கள் சுத்தப்படுத்தப்பட்டன.

காரைதீவு, மாளிகைக்காடு போன்ற கடற்கரைப் பிரதேசங்கள், காரைதீவு பிரதேசபையின் உத்தியோகத்தர்களாலும் ஊழியர்களாலும் சுத்தப்படுத்தப்பட்டன.

காரைதீவு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பிரதேச சபை ஊழியர்களும் கடற்கரைகளை சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

(ஐ)



# சுற்றுச்சூழல் தினத்தை ஒட்டி மாணவர்களுக்கு சித்திர போட்டி!

மட்டக்களப்பு, மே 29

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான விழிப்புணர்வு சித்திரப் போட்டி மட்டக்களப்பு தாண்டவன்வெளி புனித ஜோசப் வாஸ் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் சூழல் பாதுகாப்பு குழுவின் ஏற்பாட்டில், செடெக் நிறுவனத்துடன் இணைந்து, மிசூரியர் நிதி அனுசரணையில் ‘இலங்கையின் இயற்கை சூழலை பாதுகாப்பதற்கான படிக்கல் எனும் தொனிப்பொருளில் சித்திரப் போட்டி நடாத்தப்பட்டது.

மட்டக்களப்பு கரித்தாஸ் எகெட் சூழல் பாதுகாப்பு குழுவின் திட்ட இணைப்பாளர் ஏ. டி. சொலமனின் ஒழுங்கமைப்பில், எகெட் நிறுவன இயக்குநர் அருட்பணி ஏ. ஜேசுதாசன்

தலைமையில் இந்த சித்திரப் போட்டி நடைபெற்றது. (ஐ)

# 54 ஆளில்லா விமானங்கள் கீவ் நகரம்மீது தாக்குதல்!

## இழந்த நிலம் விரைவில் மீட்கப்படும் என்கிறது உக்ரைன்

கீவ், மே 29

**உக்ரைன் மீது ரஷ்யா ஆளில்லா விமானங்கள் மூலம் பெரும் தாக்குதலை நேற்றுமுன்தினம் இரவு நடத்தியுள்ளது. 54 விமானங்கள் இந்தத் தாக்குதலை நடத்தின என்றும் இவற்றில் 52 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று உக்ரைன் விமானப் படை தெரிவித்துள்ளது.**



தலைநகர் கீவை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அங்கு மட்டும் 40 ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என விமானப் படை தெரிவித்தது.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் ரஷ்யா உக்ரைன்மீது போர் தொடுத்தது. தற்போது, தலைநகர் கீவை கைப்பற்ற ரஷ்யா பெரும் போரை முன்னெடுத்து வருகின்றது.

ஆளில்லா விமானங்களின் தாக்குதலில் பல கட்டடங்கள் தாக்கப்பட்டன. இரு பெரிய கட்டடங்கள் விமானங்கள் விழுந்ததால் தீப்பற்றி எரிந்தன என்று கூறப்படுகின்றது.

ரஷ்யா தனது தாக்குதலுக்கு கமிகேஷ் ஆளில்லா விமானங்களை பயன்படுத்துகிறது. அத்துடன், பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலமாகவும் உக்ரைன் மீது தாக்குதலை தொடர்ந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, புடினின் ஆக்கிரமிப்பு படைகள் கைப்பற்றிய நிலங்களை மீட்க விரைவில் தாக்குதல் ஆரம்பிக்கப்படும் என்று உக்ரைன் பாதுகாப்பு செயலர் ஒலெக்சி டானிலோவ் கூறியுள்ளார்.

உக்ரைனின் தென்கிழக்கு நகரங்கள் பல ரஷ்யாவின் வசமாகிவிட்ட நிலையில் அங்கு தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தி வருகின்றன என்று ரஷ்யா கூறியுள்ளது.

(ஐ)



# சுற்றுச்சூழல் ஆதரவாளர்கள் 1,500 பேர் நெதர்லாந்தில் கைது!

ஆம்ஸ்டர்டாம், மே 29

நெதர்லாந்தின் ஹேக் நகரில் வீதி மறியலில் ஈடுபட்ட ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட சுற்றுச்சூழல் ஆதரவாளர்கள் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதைபடிவ எரிபொருள் மானியங்களை நிறுத்த வலியுறுத்தி பேரணியாக சென்றவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

பேரணியாக வந்தவர்களை கலைக்க தண்ணீர் தாரைப் பிரயோகத்தை பொலிஸார் நடத்தினர். மழைக்கவசங்களுடன் தயாராக வந்த எதிர்ப்பாளர்கள் அவற்றை அணிந்தவாறு அதனை எதிர்கொண்டனர்.

அவர்களை கலைந்து செல்லுமாறு பொலிஸார் எச்சரித்தனர். கலைய மறுத்த 1,579 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்ட போதும், 40 பேர் மீது வழக்கு தொடரப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

(ஐ)

# பைபிள் வைத்திருந்ததற்காக 2 வயது குழந்தைக்கும் சிறை!

## வடகொரியாவில் தொடரும் அடக்குமுறை

நியூயோர்க், மே 29

பைபிள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 2 வயது குழந்தைக்கு வடகொரியாவில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கம்யூனிஸ்ட் நாடான வடகொரியாவில் மதசுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில, பைபிள் வைத்திருந்த 2 வயது குழந்தைக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சர்வதேச அளவில் நிலவும் மத சுதந்திரம் தொடர்பாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த செய்தி சொல்லப்பட்டுள்ளது.

அதில், “வட கொரியாவில் 70,000 கத்தோலிக்கர்கள் மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களுடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறைக்கு அனுப்பப்பட்ட பலரில் இரண்டு வயது குழந்தையும் அடக்கம்.

கத்தோலிக்க மத பழக்கவழக்கங்களை கடைபிடித்தற்காகவும், பைபிளை வைத்திருந்ததற்காகவும் அந்தக் குடும்பம் கைது செய்யப்பட்டது. அதில் இரண்டு வயது குழந்தை உட்பட ஒட்டுமொத்த அந்த குடும்பமும் 2009 முதல் ஆயுள் தண்டனை பெற்று அரசியல் சிறை முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த முகாம்களில் சிறை வைக்கப்பட்டிருக்கும் கத்தோலிக்கர்கள் மிக மோசமான நிலைமையில் இருக்கின்றனர். அவர்கள் பல்வேறு வகையான உடல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொண்டு வருகின்றனர். கத்தோலிக்கர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களில் 90வீதம் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சே பொறுப்பு” என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத்துறையின் இந்த அறிக்கையானது கொரியா எதிர்காலம் (Korea Future) என்ற இலாப நோக்கற்ற அமைப்பால் வெளியிடப்பட்ட, வட கொரியாவில் பெண்களுக்கு மறுக்கப்படும் மத சுதந்திரத்தை மேற்கோள் காட்டும் வகையிலான துஷ்பிரயோகத்துக்கு ஆளான 151 கிறிஸ்தவ பெண்களின் நேர்காணலின் அடிப்படையில் வெளிவந்துள்ளது.

(ஐ)

## இந்திய பாராளுமன்றம் திறப்பு:

# தமிழர் பாரம்பரியமான செங்கோல் நிறுவப்பட்டது

புதுடில்லி, மே 29

இந்தியாவின் புதிய பாராளுமன்ற கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதேநேரம், தமிழரின் பாரம்பரியமான செங்கோலை மக்களவை சபாநாயகரின் இருக்கைக்கு வலப்புறமாக பிரதமர் நரேந்திர மோடி நிறுவினார்.



செங்கோல் நிறுவப்படுவதற்கு முன்பாக அதற்கு முறைப்படி பூஜைகள் செய்யப்பட்டன. திருவாவடுதுறை ஆதீனம் உள்ளிட்ட பல்வேறு சைவ மடங்களைச் சேர்ந்த ஆதீனங்கள் முன்னிலையில் வேத மந்திரங்களும் தேவாரமும் ஓத செங்கோலுக்கு பூஜை மேற்கொள்ளப்பட்டது. மேலும், செங்கோலுக்கு புனித நீர் தெளிக்கப்பட்டது. இதையடுத்து, புனித செங்கோல் முன்பாக பிரதமர் நரேந்திர மோடி விழுந்து வணங்கினார்.

இதையடுத்து, வேத மந்திரங்கள் ஓத, தேவாரம் பாட, மங்கள இசை இசைக்க தமிழகத்தின் திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், குன்றக்குடி ஆதீனம், மதுரை ஆதீனம், பேரூர் ஆதீனம், வேளாக்குறிச்சி ஆதீனம் உள்ளிட்ட ஆதீனங்கள் புனித செங்கோலை பிரதமர் நரேந்திர மோடியிடம் வழங்கினார்கள்.

புனித செங்கோலை கைகளில் ஏந்தியவாறு பாராளுமன்ற மக்களவைக்குள் சென்ற பிரதமர் மோடி, அங்கு சபாநாயகரின் இருக்கைக்கு அருகில் செங்கோலை நிறுவினார். அப்போது சபாநாயகர் ஓம் பிர்லாவும் உடன் இருந்தார். இந்த விழாவில் அமித் ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், யோகி ஆதித்யாநாத் உள்ளிட்ட மாநில முதல்வர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### புனித செங்கோல் வரலாறு

ஆங்கிலேயர்களிடம் இருந்து இந்தியா சுதந்திரம் அடைந்த போது அதை அடையாளப்படுத்தும் விதமாக புனித செங்கோல் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தமிழகத்தின் பழமையான ஆதீனமான திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில், பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம் இந்த செங்கோல் வழங்கப்பட்டது. இதற்காக திருவாவடுதுறை ஆதீன தம்பிரான், ஓதுவார், மங்கள இசை இசைப்பவர்கள் ஆகியோர் செங்கோலுடன் தனி விமானம் மூலம் டில்லி சென்றனர். ஆதீன தம்பிரான் முதலில் செங்கோலை ஆங்கிலேயர்களின் கடைசி ஆளுநராக இருந்த மவுண்ட் பேட்டனிடம் வழங்கினார். பின்னர் அவரிடம் இருந்து செங்கோலை வாங்கிய அவர், அதற்கு புனித நீர் தெளித்து தேவாரம் பாடி செங்கோலை ஊர்வலமாக எடுத்துச் சென்று பிரதமர் ஜவஹர்லால் நேருவிடம் வழங்கினார். பிரதமர் ஜவஹர்லால் நேரு புனித செங்கோலைப் பெற்றுக்கொண்டார். இவ்விதமாகவே, ஆட்சி மாற்றம் நிகழ்ந்ததற்கான சடங்குகள் நிகழ்ந்தேறின என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# 21 இலட்சம் லீற்றர் நீரை வெளியேற்றி கைபேசியை மீட்டெடுத்த அதிகாரி!

புதுடில்லி, மே 29

இந்தியாவின் - சத்தீஸ்கரில் ஓர் அரசு அதிகாரி தனது கைபேசியை தவறுதலாக அணைக்குள் விழுத்திவிட்டார். அதனை மீட்பதற்காக 21 இலட்சம் நீரை வெளியேற்றிய அதிகாரி பதவி நீக்கப்பட்டுள்ளார்.

ராஜேஷ் விஷ்வாஸ் என்ற அரசு அதிகாரி அணை மீது நின்று சுயபடம் எடுக்கும் போது கைபேசியை அணைக்குள் தவறவிட்டுவிட்டார்.

இதையடுத்து, அங்கிருந்து தண்ணீரை வெளியேற்ற உத்தரவிட்டார். அணையிலிருந்து நீரை வெளியேற்ற சுமார் 3 நாட்கள் பிடித்தது. 21 இலட்சம் லீற்றர் நீரை வெளியேற்றி அவர் தனது கைபேசியை மீட்டார்.

இறுதியில் அவரின் கைபேசி கண்டுபிடிக்கப்பட்ட நேரத்தில், அது செயலிழக்கும் அளவுக்கு அதனுள் தண்ணீர் புகுந்திருந்தது.

அந்தத் திறன்பேசியில் முக்கியமான அரசாங்க தகவல்கள் இருக்கின்றன என்றும், அதை மீட்டெடுக்க வேண்டும் என்றும் இந்தச் செயலுக்கு அவர் விளக்கமளித்துள்ளார்.

ஆனால், அவர் தனது பதவியைத் தவறாக பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பதவி நீக்கப்பட்டார். அவரால் வெளியேற்றப்பட்ட தண்ணீர் 600 ஹெக்ரெயர் நிலங்களுக்கு பாசனம் செய்யப் போதுமானது என்று கூறப்பட்டது. (ஐ)




# ஷோன் அபொட் அதிவேக சதம்!

லண்டன், மே 29

இங்கிலாந்தில் நடைபெறும் இருபது -20 பிளாஸ்ட் தொடரில் சர்ரே அணிக்காக ஆடும் அவுஸ்திரேலியாவின் சகலதுறை வீரர் ஷோன் அபொட் 34 பந்துகளில் சதம் விளாசி புதிய இருபது -20 வரலாறு படைத்துள்ளார். இந்த இருபது - 20 தொடரின் வரலாற்றில் 34 பந்துகளில் சதம் கண்ட 2ஆவது வீரர் ஆனார் ஷோன் அபொட்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்த இந்தப் போட்டியில் சர்ரே அணி ஒரு கட்டத்தில் 66/4 என்று தத்தளித்துக் கொண்டிருந்தது. அச்சமயம், அவுஸ்திரேலிய ஷோன் அபொட் இறங்கினார். மைதானம் முழுவதும் பந்துகள் பறந்தன 11 சிக்ஸர்களை பறக்க விட்டார். 44 பந்துகளில் 110 ஆட்டமிழக்காமல் நின்று வரலாற்று நாயகனாகத் திரும்பினார்.

சர்ரே அணி 5 விக்கெட்கள் இழப்புக்கு 20 ஓவர்களில் 223 ஓட்டங்கள் விளாசியது.

எதிரணியான கெண்ட் அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி தழுவியது.

ஷோன் அபொட் இன்னிங்ஸின் சிறப்பு என்னவெனில் சக அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்கேன் ரிச்சர்ட்சன் கெண்ட் அணிக்காக வீசிய 17ஆவது ஓவரில் 30 ஓட்டங்களை குவித்தார்.

இதற்கு முன்பாக ஷோன் அபொட் அடித்த அதிகபட்ச இருபது -20 ஓட்டம் 41 ஓட்டங்கள்தான். அனைத்து இருபது -20 கிரிக்கெட் வடிவத்திலும் ஷேன் அபொட் அடித்த அதிவேக சதம் 4ஆவது அதிவேக சதமாகும். 2013ஆம் ஆண்டு ஐ. பி. எல். தொடரில் பெங்களூர் அணிக்காக கிறிஸ் கெய்ல் 31 பந்துகளில் சதம் விளாசியதுதான் இருபது -20 கிரிக்கெட்டில் அதிவேக சதமாகும்.



# உலக கிண்ண உதைபந்து ஆர்ஜென்ரீனா கோல் மழை

சன்டியாகோ, மே 29

உலகக் கிண்ண உதைபந்தாட்ட (20 வயது) லீக் போட்டியில் கோல் மழை பொழிந்த ஆர்ஜென்ரீனா அணி 5-0 என நியூசிலாந்தை வீழ்த்தி, ‘ஹட்ரிக்’ வெற்றி பெற்றது.

ஆர்ஜென்ரீனாவில், 20 வயதுக்குட்பட்டோருக்கான ‘பிபா’ உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தின் 23ஆவது தொடர் நடக்கிறது. இதில் ஆர்ஜென்ரீனா, பிரேசில், இத்தாலி, நியூசிலாந்து உள்ளிட்ட 24 அணிகள் 6 பிரிவுகளாக லீக் சுற்றில் விளையாடுகின்றன.

சான்டியாகோ டெல் எஸ்டிரோவில் நடந்த ‘ஏ’ பிரிவு லீக் போட்டியில் ஆர்ஜென்ரீனா, நியூசிலாந்து அணிகள் மோதின. தொடக்கத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்ரீனா 5-0 என்ற கோல் கணக்கில் வென்றது. ஏற்கனவே உஸ்பெகிஸ்தான், கௌதமாலா அணிகளை வீழ்த்திய ஆர்ஜென்ரீனா, தொடர்ந்து 3ஆவது வெற்றியை பதிவு செய்தது. (ஐ)

# திரைப்படமாகின்றது கங்குலியின் வாழ்க்கை

புதுடில்லி, மே 29

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலியின் வாழ்க்கை திரைப்படமாக உருவாகிறது. இதற்கான படப்பிடிப்பு பணிகள் இந்த ஆண்டு இறுதியில் தொடங்கவுள்ளது.

இந்திய அணியின் தலைவர்கள் வரிசையில் வெற்றிகரமான தலைவராக வலம் வந்தவர் சௌரவ் கங்குலி. 1996ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அறிமுகமாகி அடுத்தடுத்து இரு சதங்களை அடித்து கவனத்தை ஈர்த்தவர்.

2000ஆம் ஆண்டில் இந்திய அணிக்குள் ஆட்ட நிர்ணய சதி தலைதூக்கியபின் அணித் தலைவராக கங்குலி நியமிக்கப்பட்டார். தனது திறமையாலும், தலைமை பண்பாலும் அணிக்கு சிறந்த தலைவராக கங்குலி வலம் வந்தார்.




துடுப்பாட்டத்தில் ஆவேசத்தையும், களத்தில் ஆக்ரோஷத்தையும் இணைத்துச் செயலாற்றுவதுதான் கங்குலியின் பழக்கம். கங்குலி தலைமையில் வெளிநாடுகளில் 28 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இந்திய அணி 11 வெற்றிகளைப் பெற்றது.

கடந்த 2021ஆம் ஆண்டு தனது வாழ்க்கைப் பயணத்தை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று திரைப்படம் ஒன்று உருவாக இருப்பதாக கங்குலி தெரிவித்திருந்தார். அது வெறும் அறிவிப்போடு மட்டுமே நின்றுவிட்டது. அதற்கான பணிகள் எதுவும் தொடங்கப்படவில்லை.

இந்த நிலையில், கங்குலியின் வரலாற்று படத்தை பொலிவூட் தயாரிப்பாளர் லவ் ரஞ்சன் தயாரிக்க முன்வந்துள்ளார். சமீபத்தில் கங்குலியை நேரில் சந்தித்து இது குறித்து அவர் பேசினார் என்று தெரிகிறது.

மிகப்பெரிய பொருட்செலவில் உருவாகவிருக்கும் இப்படத்தின் படப்பிடிப்பு இந்த ஆண்டு இறுதியில் தொடங்கப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. மேலும் இதில் நாயகனாக ரன்பீர் கபூர் நடிக்க கங்குலி விருப்பம் தெரிவித் திக்கிறார் என்று தெரிகிறது. கங்குலியின் ஆரம்ப நாட்களிலிருந்து அவர் பி. சி. சி. ஐயின் தலைவராக நியமிக்கப்பட்டது வரை நடந்த முக்கியச் சம்பவங்களை இந்தப் படம் கூறவிருக்கிறது. (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி; கெய்வாட்டுக்கு பதில் ஜெய்ஸ்வால்!

புதுடில்லி, மே 29

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டியில் ருதுராஜ் கெய்க்வாட் மாற்று வீரராக ஜெய்ஸ்வால் இந்திய அணியில் இடம் பிடித்திருந்தார்.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி அடுத்த மாதம் 7ஆம் திகதி இங்கிலாந்தின் லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில், ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணியும், பட் கம்மின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலியாவும் மோதவுள்ளன.

கடந்த முறை நியூசிலாந்து அணியிடம் தோல்வி கண்ட இந்திய அணி இந்த முறை அவுஸ்திரேலியாவை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் உள்ளது.

இந்திய அணியில் கே.எல்.ராகுல், ரிஷப் பண்ட், பும்ரா, ஸ்ரேயஸ் அய்யர் ஆகியோர் இல்லாதது பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது.




அணியில் பல முன்னணி வீரர்கள் காயம் அடைந்தமையால், ருதுராஜ் கெய்க்வாட், முகேஷ் குமார், சூர்யகுமார் யாதவ் ஆகியோர் மேலதிக வீரர்களாக இடம் பெற்றிருந்தனர்.

இந்நிலையில் இந்திய அணியில் ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு பதிலாக யஷஸ்வி ஜெய்ஸ்வால் அணியில் இடம் பெறவுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

ஏனெனில் ஜூன் 2 அல்லது 3இல் ருதுராஜ் கெய்க்வாட்டுக்கு திருமணம் நடைபெற இருக்கிறது என்றும் இதன் காரணமாக அவருக்கு பதிலாக இந்திய அணியில் யஷஸ்வி ஜெய்ஸ்வால் இடம் பெற உள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. (ஐ)

# அடுத்த தொடரில் டோனி ஆடமாட்டார்

## மத்தியூ ஹைடன்

சென்னை, மே 29

அவுஸ்திரேலிய - சென்னையின முன்னாள் வீரர் மத்தியூ ஹைடன் டோனி அடுத்த ஐ. பி. எல். தொடரில் விளையாட மாட்டார் என்பது தனிப்பட்ட கருத்து என்று தெரிவித்துள்ளார்.

“எம்.எஸ்.தோனி ஒரு மேஜிஷியன். அவர் வேறொருவரின் குப்பைகளை தனக்கான பொக்கிஷமாக்குபவர். அவர் மிகவும் திறமையான நேர்மறையான தலைவர். அவர் மிகவும் சுவாரஸ்யமான ஒன்றைச் சொன்னார். இது அவரின் பணிவு மற்றும் அவரது உண்மைத்தன்மையை எடுத்துரைப்பதாக உள்ளது.

அணி உரிமையாளருக்கும் அவருக்குமான உறவு வலிமையான அணியைக் கட்டமைக்க உதவியுள்ளது. அணியை கட்டமைப்பதில் டோனி கில்லாடி. இந்தியாவுக்காக அதைச் செய்தார். சென்னைக்காகவும் திறம்படச் செய்தார். அவர் அடுத்த ஆண்டு ஆடுகிறாரா இல்லை, ஆடப்போவதில்லையா என்பது ஏறத்தாழ தேவையற்ற பிரச்னைதான். தனிப்பட்ட முறையில் நான் என்ன நினைக்கிறேன் என்றால், டோனி





ஆட மாட்டார் என்றுதான். ஆனால், என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். ஏனெனில், அதுதான் டோனி” என்று கூறினார் ஹைடன்.

# பௌத்த மதம் அவமதிப்பு; பெண் யூ-ரியூபர் கைதானார்!

கொழும்பு, மே 29

**பௌத்த தத்துவம் மற்றும் கலாசாரத்தை அவமதிக்கும் வகையில் உரை நிகழ்த்தினார் என்று விமர்சிக்கப்பட்ட நடாஷா எதிரிசூரிய இலங்கையை விட்டு வெளியேற முற்பட்ட வேளையில் நேற்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.**



இவரின் கருத்துக்கு எதிராக பல தரப்பினரும் முறைப்பாடு செய்து வரும் நிலையிலேயே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைது செய்தனர்.

'கொழும்பு கொமெடி சென்ட்ரல்' என்ற யூ-ரியூப் சனல் ஏற்பாடு செய்திருந்த 'மோதா பிமானி' என்ற நகைச்சுவை நிகழ்ச்சி ஏப்ரல் 1ஆம் திகதி கொழும்பு பிஷப் கல்லூரியின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

அப்போதே அவரின் சர்ச்சைக்குரிய கருத்து வெளியானது. இருப்பினும், காணொலியை இணையத்தில் வெளியிட்ட பின்னர், ஒன்றரை மாதங்களுக்குப் பிறகு பௌத்தத்தை அவமதித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

மே 24 அன்று, அவரின் உரை யூ-ரியூப்பில் பிரபலமானபோது சர்ச்சை வெடித்தது. பின்னர் மே 26 அன்று, அவர் அதை நீக்கிவிட்டு மன்னிப்பு கேட்டார்.

இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான பிரஜைகள் அமைப்பு, பலாங்கொட காஷ்யப தேரர் உள்ளிட்ட பல குழுக்கள் அவருக்கு எதிராக முறைப்பாடுகளை பதிவு செய்தன.

பொலிஸ் மா அதிபருக்கு நேரடியாக பொதுமக்கள் செய்யும் முறைப்பாடுகள் பற்றிய குறிப்பும் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டது. இதனிடையே, மோதாபிமானி என்ற பெயரில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி மற்றும் சமூக வலைதளங்களில் பரவும் காணொலிகள் குறித்து ஆராய்ந்து விசாரணை நடத்தவுள்ளதாக புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

(ஐ)

# மத நிகழ்வில் குழப்பம் 7 மாணவர்கள் கைது!

கொழும்பு, மே 29

அநுராதபுரம் - கெக்கிராவை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய வழிபாட்டு நிகழ்வின்போது வன்முறையில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் 7 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கெக்கிராவை புறநகர் பகுதியில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வின்போது, அதே பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் குழு ஒன்றே இவ்வாறு நடந்துகொண்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த மாணவர்கள் பிரித் மண்டபத்தையும் தாக்கி சேதப்படுத்தினர் என்று கூறப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள் 11, 12 மற்றும் 13 ஆம் வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# மின்னல் தாக்கியதில் இரு இளைஞர்கள் பலி!

கொழும்பு, மே 29

வயலில் வேலை செய்து கொண்டிருந்த இரு இளைஞர்கள் மின்னல் தாக்கி உயிரிழந்தனர்.

மொனராகலை - புத்தல, கோனகங் ஆர பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிற்பகல் இந்த இரு இளைஞர்களும் வயல் நிலத்தில் விவசாயம் செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி இருவரும் உயிரிழந்தனர்.

உயிரிழந்த 31 மற்றும் 32 வயதுடைய இருவரும் புத்தல, வகுருவெல பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.

(ஐ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்:

# தப்புல டி லிவேராவை விசாரிப்பதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்குக!

## சபாநாயகரிடம் ஆளும் கட்சி கோரிக்கை

கொழும்பு, மே 29

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் பின்னணியில் பரந்த சதி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா முன்வைத்த குற்றச்சாட்டை விசாரிப்பதற்காக பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமிக்குமாறு கோரி அரசாங்கத்தின் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கடிதம் ஒன்றை கையளித்துள்ளனர்.

டி லிவேரா ஓய்வு பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்பு, மே 17, 2021 அன்று ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலை அடிப்படையாக வைத்தே எம். பி.கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

நௌபர் மௌலவி என்ற நபரே இந்த சதியில் முக்கியப் பங்காற்றினார். சதிகாரர்களின் தலைவனாகவும் இருந்த நிலையில் அவர்தான் மூளையாக செயல்பட்டார் என்று உறுதியாகக் கூற முடியாது என அப்போதைய சட்டமா அதிபர் கூறினார் என்று எம். பிக்கள் கூறுகின்றனர்.

சஹ்ரான் ஹாஷிம் - தற்கொலை குண்டுத் தாக்குதல்களை நடத்த முடிவு செய்திருந்தாலும் - சதியில் ஒரே ஒரு நபர் மட்டுமே ஈடுபட்டார் என்றும் முன்னாள் சட்டமா அதிபர் கூறியிருந்தார்.

சட்டமா அதிபராக, டி லிவேரா அனைத்து விசாரணை கோப்புகள், ஆதாரங்கள் மற்றும் தாக்குதல்களுடன் தொடர்புடைய பிற தகவல்களை நேரடியாக அணுகினார். இந்த நிலையில், தாக்குதல்கள் பற்றி இதுவரை வெளியிடப்படாத தகவல்கள் அவருக்கு ஏதாவது தெரிந்திருக்கலாம் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றன என்று எம். பிக்கள் கூறுகிறார்கள்.

"எனவே, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கும் நோக்கில் அவரின் அறிக்கைகள் மற்றும் அவற்றின் அடிப்படையை விசாரிக்க வேண்டியது அவசியம் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் சட்டமா அதிபரின் கருத்துக்கள் குறித்து பாராளுமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ய 15 உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழுவை நியமிக்க வேண்டும் என்று எம். பிக்கள் முன்மொழிந்துள்ளனர். பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனம் செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் முன்மொழிகின்றனர்.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றில் அவர் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் டி லிவேராவின் கருத்துகள் தொடர்பாக அவர் வெளியிட்ட வாக்குமூலத்தை கைதுசெய்து வாக்குமூலம் பதிவுசெய்வதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவு அண்மையில் ஜூன் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. தம்மிடம் இருந்து வாக்குமூலத்தைப் பதிவுசெய்வதற்காக பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவு அழைப்பாணை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்த டி லிவேரா, தான் சட்டமா அதிபராக கடமையாற்றிய காலத்தில் தனது செயல்பாடுகளை கேள்விக்கு உட்படுத்தும் அதிகாரம் பொலிஸாருக்கு இல்லை எனவும் தெரிவித்தார். இது சட்டமா அதிபரின் சிறப்புரிமைகளை மீறுவதாகும் என்றார்.

கடந்த ஏப்ரல் 19 மற்றும் 21 ஆம் திகதிகளில் முன்னாள் சட்டமா அதிபருக்கு, பயங்கரவாத தடுப்பு பிரிவு அழைப்பாணை அனுப்பியது. அவர் பதிலளிக்கவில்லை. அவரின் சட்டத்தரணிகள் ஏழு பக்க கடிதத்தை பயங்கரவாத தடுப்பு பிரிவிடம் சமர்ப்பித்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# வரிகள் தொடர்பான வழக்கை விசாரிக்க தனியான நீதிமன்று

கொழும்பு, மே 29

வரிகள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க தனியான நீதிமன்றம் ஒன்றை நிறுவுவதற்கான முன்மொழிவை சமர்ப்பிக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பிரத்தியேகமான நீதிமன்றம் இல்லாததால் வரி தொடர்பான விவகாரங்களை விசாரிப்பதில் பெரும் தாமதம் ஏற்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போதைய வரி அறவீட்டில் நிலவும் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை நீக்கி வரி செலுத்துதலை முறைப்படுத்த முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.



வரி செலுத்தும் முறைமையை சிறப்பாக செயல்படுத்த ஆர். ஏ. எம். ஐ. எஸ். திட்டத்தின் மூலம் மின் மற்றும் இலத்திரனியல் முறை பயன்படுத்தப்படும் எனவும் அவர் நேற்று நடத்திய சந்திப்பு ஒன்றில் தெரிவித்தார்.

(ஐ)

# டிஜிற்றல் பிறப்பு சான்றிதழை வெளியிட திட்டங்கள் தயார்!

கொழும்பு, மே 29

டிஜிற்றல் பிறப்புச் சான்றிதழை உடனடியாக வெளியிட தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.



புத்தளம் மாவட்டத்தில் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்கள் இல்லாதவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் நடமாடும் சேவையில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப அமைச்சுடன் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

(ஐ)

## மதங்களை...

புத்த சாசனத்தையும் பௌத்த மதத்தையும் அவமதிக்கும் வகையிலான கருத்து வெளியிடல் அண்மைக் காலமாக தீவிரமடைந்துள்ளன. சிங்கள - பௌத்த நாடு என்று அடையாளப்படுத்தும் வகையில் பௌத்தர்கள் அதிகமாக வாழும் இந்த நாட்டில் சகவாழ்வு என்று குறிப்பிட்டுக் கொண்டு புத்தசாசனம் மற்றும் பௌத்த தேரர்களை அவமதிக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமூக வலைத்தளங்களில் முறையற்ற கருத்துகளை குறிப்பிடும் தரப்பினருக்கு எதிராக கடுமையான விமர்சனங்கள் வெளியானதை தொடர்ந்து அவர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக மன்னிப்பு கோருகிறார்கள். ஆனால், அவர்கள் குறிப்பிட்ட கருத்துகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விடும்.

நடாசா எதிரிசூரிய என்ற கிறிஸ்தவ மத பெண் குறிப்பிட்ட கருத்துகள் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. புத்தசாசனம், கௌதம புத்தரின் பிறப்பு, சிறப்பு ஆகியவற்றுக்கும், பௌத்த மரபுகளையும் அவர் கடுமையாக விமர்சித்து - அவமதித்துள்ளார்.

அரசமைப்பின் ஊடாக பௌத்த மதம் பாதுகாக்கப்பட வேண்டும் - போசிக்கப்பட வேண்டும் என உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் அண்மைகாலமாக அமைப்புக்கள், தனிநபர் என்ற அடிப்படையில் புத்த சாசனத்துக்கு எதிரான கருத்துகள் தீவிரமடைந்துள்ளன.

மதங்களை தொடர்புப்படுத்தி முரண்பட்ட கருத்துக்களை ஒரு தரப்பினர் குறிப்பிடும்போது பொறுப்பான அதிகாரிகள் கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பௌத்த பிக்குகளாகிய எமக்கு அவரது கருத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவும் முடியாது அமைதியாக இருக்கவும் முடியாது. ஆகவே, இந்த பெண்ணுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மதம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான சட்டத்தின் (ஐ.சி.சி.பி.ஆர்) கீழ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், மதங்களை அவமதிக்கும் வகையில் முரண்பாடுகள் தோற்றம் பெறாத தன்மையை உறுதிபடுத்த சகலரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## டிப்பர்...

இதில் மூன்று பிள்ளைகளின் தந்தையான யாழ்ப்பாணம் - வடமராட்சி - ஆழிய வளையை சேர்ந்த கந்தசாமி கலைரூபன் (வயது 38) என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், விசுவமடுவிலிருந்து ஆழியவளையை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். அப்போது, பளையிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த டிப்பர், டிராக்டரை முந்திச் செல்ல முயன்ற சமயம், எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியது.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்தையடுத்து டிப்பர் சாரதியும் அதில் இருந்தவர்களும் வாகனத்தை அங்கேயே கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேசமயம், விபத்தில் பலியானவரின் மகன் இன்றைய தினம் ஆரம்பமாகும் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சாதாரண...

பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட் டுள்ளன. 40 ஆயிரம் ஊழியர்கள் பரீட்சை கடமையில் ஈடுபடவுள்ளனர்.

பரீட்சார்த்திகளின் வசதி கருதி விசேட போக் குவரத்து சேவைகளும் ஒழுங்க மைக்கப்பட்டுள் ளன என்பதும் குறிப்பி டத்தக்கது. (ஐ)

# நீர் வளத்துறை மறுசீரமைப்புக்கு ஏ. டி. பி. 200 மில்லியன் டொலர்

கொழும்பு, மே 29

ஆசிய அபிவிருத்தி வங்கி (ஏ. டி. பி) மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகள் இடையேயான விசேட கலந்துரையாடல் ஒன்று நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் அவரின் அமைச்சு பணிமனையில் நடைபெற்றது.

நீர்வளத்துறையில் மேற்கொள்ளப்படவுள்ள மறுசீரமைப்பு நடவடிக்கைக்கான ஒப்பந்தங்களை இறுதிப்படுத்தும் நோக்கிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

மூன்று ஆண்டு கால சீர்திருத்த திட்டத்தில் ஒருமித்த கருத்தை அடைவதே கூட்டத்தின் நோக்கமாகும். சீர்திருத்த வேலைத்திட்டமானது இலங்கையின் நீர்த்துறையில் உள்ள பல அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மாற்றியமைக்கும் முன்முயற்சி ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளது. இது சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை வலுப்படுத்த வரவு - செலவு திட்ட ஆதரவு உதவியாக 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திப்பு சாதகமான முடிந்துள்ளது. இது ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகளை இறுதி செய்வதற்கு வழிவகுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பௌத்தத்தை அவமதித்த நடாஷாவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, மே 29

நகைச்சுவை நிகழ்ச்சி ஒன்றில் பௌத்த மதத்தை அவமதித்த குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நடாஷா எதிரிசூரியவை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டுள்ளார்.

சிங்கப்பூர் செல்வதற்காக நேற்று அதிகாலை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் கணினி புலனாய்வுப் பிரிவு நீதிமன்றில் அறிவித்துள்ளது.

இந்த சந்தேக நபர் பௌத்தம் மற்றும் கலாசாரத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டு மக்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டார் என்று குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது. (ஐ)

## வட மாகாண....

கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பணிமனையில் நேற்று முன்தினம் இருவரும் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில், வடக்கு மாகாணத்தில் இந்தியாவால் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன என்று இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி மற்றும் வட மாகாண மக்களின் நலனுக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் செயல்படுகிறது என்று இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வடக்கு ஆளுநரிடம் தெரிவித்தார். (ஐ)

## பாக்குநீரி...

03.05 மணியளவில் தலைமன்னாரை வந்த டைந்தார்.

தலை மன்னாரை வந்தடைந்த மதுசிகனை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன், மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்கள், மட்டக்களப்பு மாவட்ட சாரணர் சங்க பிரதிநிதிகள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் உட்பட பலரும் வரவேற்று பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்தனர். (ஐ)

## ஜெனிவா...

கும் அறிக்கையிடுவதற்கும் உயர் ஸ்தானிகர் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன்- பொறுப்புக்கூறல், மனித உரிமைகள் மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் மற்றும் மனித உரிமைகள் பேரவைக்கு அதன் 53 மற்றும் 55ஆவது அமர்வுகளில் வாய்வழி புதுப்பிப்பை வழங்குதல், 54ஆவது அமர்வில் எழுத்துபூர்வ அறிவிப்பு மற்றும் அதன் 57ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கை என்பன இந்த தீர்மானத்தின்படி வலியுறுத்தப்பட்டுள்ளன.

## ஐ. பி. எல்...

னத்தில் நடைபெறவிருந்தது. முன்னரே மழை எதிர்வுகூறல் வெளியாகியிருந்தது. ஆனால், போட்டி முழுமையாக தடைப்படும் என்று எதிர்பார்க்கப்படவில்லை.

இந்நிலையில், நேற்று இரவு 11 மணி வரையில் போட்டியை ஆரம்பிக்க முடியவில்லை. இதையடுத்து, போட்டி இன்றைய தினத்துக்கு மாற்றப்பட்டது.

எனினும், இன்றைய தினமும் மழைக்கான வானிலை இருப்பாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனினும், மாலை 6 மணி முதல் வானம் தெளிவாக இருக்கும் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ஐ)

## நாணய...

பார்வையும் மாற்றமடைந்துள்ளன இலங்கையில் கடந்த வருடத்தில் நடந்த விடயங்களை விட வேறு எதுவும் வியத்தகு விதத்தில் இதனை வெளிப்படுத்த முடியாது.

இலங்கை கடந்த வருடம் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் நாங்கள் உதவினோம். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு உதவியதைவிட நாங்கள் அதிகளவு உதவியுள்ளோம்.

உங்களில் எவரேனும் இலங்கைக்கு சமீபத்தில் சென்றிருந்தால் இந்த உதவியால் இந்தியா குறித்து மாற்றமடைந்துள்ள கருத்தை அவதானிக்கமுடியும்.

நாங்கள் இன்று பெரிய இலட்சியம் மிக்க - செல்வாக்கு மிக்க இந்தியாவுக்காக முயற்சிக்கின்றோம். எங்கள் அயல்களை விஸ்தரிக்க முயல்கின்றோம்.

நாங்கள் இந்த விஸ்தரிக்கப்பட்ட அயல் எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்பது குறித்தும் ஆராய்கின்றோம். அது இந்து சமுத்திரத்தில் உள்ள தீவுகளாக இருக்கலாம், தென்கிழக்காசியா, வளைகுடாவில் உள்ள நாடுகளாக இருக்கலாம். ஐக்கியஅரபு இராச்சியம், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுடனான உறவுகள் பெருமளவு மாறியுள்ளன.

எங்கள் அயலை பற்றிய மிகவும் சுருக்கப்பட்ட பார்வையிலிருந்து நாங்கள் இலட்சியம் மிக்க பார்வையை நோக்கி மாறியுள்ளோம் - என்றும் கூறினார். (ஐ)



# கஞ்சாவுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 29

அநுராதபுரம் - பதவியாவில் கடை ஒன்றில் மறைத்து வைத்து விற்கப்பட்ட கஞ்சா பொதி யாழ்ப்பாணத்தின் 51ஆவது படைப் பிரிவின் தகவல் உதவியால் கைப்பற்றப்பட்டது.

51ஆவது படைப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் பதவியா பொலிஸாருக்கு அளிக் கப்பட்டு கஞ்சா கைப்பற்றப்பட் டது. 4.5 கிலோ கஞ்சா இவ்வாறு கைப்பற்றப்பட்டது. அத்துடன், இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதவியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-03)

# கார்கள் விபத்து ஒருவர் மரணம்! எண்மர் படுகாயம்!

கொழும்பு, மே 29

இரண்டு கார்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 69 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்தார். 8 பேர் படுகாயமடைந்தனர்.

அநுராதபுரம் தெனிய பிரதான வீதியின் ஆலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவர்களில் 4 வயது குழந்தை, 38 வயதான கார் சாரதி ஆகியோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குருநாகல் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த காரின் சாரதி நித்திரை தூங்கியதால், கார் வீதியை விட்டு விலகி எதிரே வந்த காருடன் மோதியது.

இரு கார்களில் சிக்கி காயமடைந்தவர்களை பிரதேசவாசிகள் மீட்டு அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

## வட, கிழக்கு....

யால் மிக அதிகமாகப் பாதிக்கப்படும்.

எனினும், தென்மேற்கு பருவமழை தொடங்கியதும் ஓரளவுக்கு நிவாரணம் கிடைக்கும். வெப்ப நிலை உயர்வில் எல்நினோ காலநிலை தாக்கமும் முக்கிய பங்கு வகிக்கிறது. பசுபிக் சமுத்திரத்தில் கடல் மட்டங்களில் வெப்பநிலை அதிகரித்து வருவதே இதற்குக் காரணம். இது உலகளவில் கடலில் அதிக வெப்ப தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதேநேரம், வெப்பநிலை பாதிப்பால் ஏற்படும் நோய்களை குறைக்க தேவையான நடவடிக்கைகளை மக்கள் எடுக்க வேண்டும். கர்ப்பவதிகள், சிறுவர்கள், முதியோர்கள் வெயிலில் இருந்து தங்களை காக்க கூடுதல் முன்னெச்சரிக்கை தேவை. வயது வந்த நபர் ஒருவர் நாள் ஒன்றில் சராசரி 2.5 லீற்றர் தண்ணீரை அருந்த வேண்டும். அத்துடன், வெளிர்நிற ஆடைகளை அணி வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பெரமுனவை விட்டு விலகினாலே ஜனாதிபதியுடன் இணையலாம்!

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்



கொழும்பு, மே 29

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் ஆக்கிரமிப்பில் இருந்து வெளியில் வந்தால் மாத்திரமே அவருடன் இணைந்து செயல்படுவது தொடர்பில் சிந்திக்கலாம் என சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

கண்டியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்றுவந்த மோசமான பொருளாதார நெருக்கடி காரணமாக பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்றன. இதன் காரணமாக அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். என்றாலும் ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர் அல்ல. அவர் மொட்டு கூட்டணியின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்.

என்றாலும் பொதுஜன பெரமுன அரசாங்கத்திலே ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதியாக செயல்படுகிறார். அதனால் அவர் பொதுஜன பெரமுனவின் ஆக்கிரமிப்பிலேயே இருந்து வருகின்றார்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்படுவது தொடர்பில் சிந்திக்க வேண்டி இருக்கிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவின் பணயக் கைதியாகவே இருக்கிறார். அவர் அங்கிருந்து வெளியில் வந்து எமது கொள்கையுடன் பயணிக்கும் நிலை ஏற்பட்டால் அவருடன் இணைந்து செயல்படுவது தொடர்பில் சிந்திக்கலாம்.

நாட்டில் ஸ்திரமான அரசியல் நிலைமையை ஏற்டுபடுத்த நிச்சயமாக தேர்தல் நடத்தப்பட வேண்டும். மக்கள் ஆணையுடனான அரசாங்கம் ஒனறு அமைக்கப்படவேண்டும். எந்த தேர்தலை நடத்தினாலும் அதற்கு நாங்கள் முகம்கொடுக்க தயாராகவே இருக்கிறோம் - என்றார். (ஐ)

# மணவாள கோல திருவிழாவும் சேக்கிழார் குரு பூசையும்

யாழ்ப்பாணம், மே 29

தென்மராட்சி - வரணி மாசேரி - புராதன குருநாதர் கோயில் ஸ்ரீலஸ்ரீ குருநாத நாகப்ப சுவாமி சித்தர்பீடம் நடத்தும் வருடாந்த மணவாளகோலத் திருவிழாவும், சேக்கிழார் சுவாமிகள் குருபூசையும் நாளை மறுதினம் புதன்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் விசேட கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

குருநாதர் சுவாமி கிராமவலம் எழுந்தருளி மாசேரி வரணி விக்கிரமா குளப்பிள்ளையார் ஆலயத்தில் சேக்கிழார் சுவாமிகளுக்கு விசேட பூஜை வழிபாட்டை தொடர்ந்து சொற்பொழிவை ப. ஜஸ்மிகன் ‘சேக்கிழார் சுவாமிகள்’ என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, ‘பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டுவது தாயா ? தந்தையா?’ என்ற தலைப்பில் பட்டிமன்றம் தி. அபராஜிதன் தலைமையில் நடைபெறும், தொடர்ந்து, குருநாதர் வில்லிசை குழுவினர் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் தலைமையில் ‘என்றும் இளமை நாயனார்’ என்னும் தலைப்பில் வில்லிசை வழங்கவுள்ளனர். (ஐ)

# தனியார் பல்கலையில் கற்கும் மாணவர்க்கு வட்டியில்லா கடன்!

## யோசனை இந்த வாரம் அமைச்சரவைக்கு

கொழும்பு, மே 29

தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதற்கான யோசனையை இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக பதில் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கு மேற்படிப்பைத் தொடர வட்டியில்லா கடனை வழங்கும் முன்மொழிவை அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பதாக ருவன்வெல்லவில் நடைபெற்ற சந்திப்பொன்றில் அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் படிப்பதற்கு 9 இலட்சம் ரூபாய் வரை வட்டியில்லா கடன் கிடைக்கும். அத்துடன், கற்றல் கால பிறசெலவுக்காக 3 இலட்சம் ரூபாய் கடன் கிடைக்கும். படிப்பு முடிந்ததும், இந்தக் கடனை வட்டி இல்லாமல் திருப்பிச் செலுத்த மேலும் இரண்டு ஆண்டுகள் வழங்கப்படும் என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

# நடமாடும் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை முன்னெடுப்பு!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர்

கொழும்பு, மே 29

மாற்றுத்திறனாளிகள் மற்றும் நடக்க முடியாதவர்களுக்காக நடமாடும் வாக்குப்பதிவு நிலையங்களை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து தேவையான தரப்பினருக்கு அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வீடுகளை விட்டு வெளியேற முடியாதவர்களுக்கு விசேட வாக்களிப்பு நிலையங்களை நிறுவுவதன் மூலம் தமது வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் அரசியல் கட்சி முகவர்கள் வாக்களிப்பதைக் கண்காணிக்க முடியும். அதே நேரத்தில் வாக்காளர் செல்வாக்கு இல்லாமல் வாக்களிக்க முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

அத்தியாவசிய சேவை ஊழியர்கள், சுதந்திர வர்த்தக வலயங்களுக்குள் பணிபுரிபவர்கள் மற்றும் விசேட வசதிகள் தேவைப்படுபவர்களுக்கும் வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட வேண்டும். முன்கூட்டியே வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கான பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் தேர்தல் நாளுக்கு முன்னதாக வாக்களிக்க அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான முன்மொழிவு சட்ட வரைவு ஆசிரியருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அத்தகைய விதிமுறைகள் விரைவில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என நம்புவதாகவும் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (ஐ)

# சிறுவன் துஷ்பிரயோகம் சந்தேகநபர் கைதானார்!

கொழும்பு, மே 29

12 வயதுச் சிறுவனை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் தம்புளை மாநககர முன்னாள் மேயரின் சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து, தம்புள்ளை பொலிஸின் சிறுவர் பாதுகாப்பு பிரிவினர், விசாரணையின் பின்னர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சிறுவனை கண்டுபிடித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிய வருகின்றது.

# காதலியின் நிர்வாண படங்களை எடுத்து மிரட்டிய சிப்பாய் கைது!

கொழும்பு, மே 29

யுவதி ஒருவரின் நிர்வாண படங்களை இணையத்தில் வெளியிடுவேன் என அச்சுறுத்திய இராணுவ சிப்பாய் ஒருவரை வாரியபொல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த யுவதி ஒருவருடன் கைதான சிப்பாய் காதல் உறவில் ஈடுபட்டிருந்தார்.

இருவரும், உறவில் ஈடுபட்ட தருணங்களை குறித்த சிப்பாய் ஒளிப்பதிவு செய்து வைத்துள்ளார். இந்த நிலையில், இருவர் இடையேயும் மனக்கசப்பு ஏற்பட்டதையடுத்து யுவதி பிரிந்து சென்றுள் ளார்.

இந்த நிலையில், ஒளிப்பதிவு செய்த காட்சிகள், படங்களை காட்டி முன்னாள் காதலியை சிப்பாய் மிரட்டியுள்ளார்.

அந்த யுவதி பொலிஸாரிடம் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய சிப்பாய் கைது செய்யப்பட்டார். (ஐ)

# கால்வாயில் தவறிவீழ்ந்த குழந்தை உயிரிழந்தது!

கொழும்பு, மே 29

நீர்ப்பாசன கால்வாயில் தவறி விழுந்து ஒரு வருடமும் 8 மாத குழந்தையும் உயிரிழந்தது.

அநுராதபுரம் - தம்புத்தேகம -ராஜங்கனை நீர்த்தேக்க பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம இடம்பெற்றுள்ளது.

தம்புத்தேகம, மலியதேவபுர பகுதியை சேர்ந்த குழந்தையே உயிரிழந்தது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# சட்டவிரோத பயணத்தை தடுக்குமாறு இலங்கையிடம் பிரிட்டன் கோரிக்கை

கொழும்பு, மே 29

ஐக்கிய இராச்சியத்துக்கு இலங்கையர்கள் சட்டவிரோதமாக செல்வதைத் தடுப்பதற்காக அந்த நாட்டு அரசாங்கம் இலங்கை அரசிடம் உதவி கோரியுள்ளது.

அண்மையில், இலங்கையின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலெஸை சந்தித்த இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் பிரித்தானியாவுக்கு இலங்கையர்கள் சட்டவிரோதமாக வருவதைத் தடுக்க உதவுமாறு கோரிக்கை விடுத்தார்.

குறித்த சந்திப்பின்போது நாட்டின் தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.05.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.